விலை ரூபா 5-00 Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

சங்கு02 வள்ளுவர் ஆண்டு 2032 புரட்டாதி 2 செவ்வாய்க்கிழமை (18-09-2001) தொலைபேசி 3378 ஒலி 281

அதி நவீன மோஸ்தர்களில்
தரம் குன்றா
தங்க நகைகளுக்கு
அர்ச்சனா
ஜுவலர்ஸ்
118, கஸ்தூரியார் வீதி,
176/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## 17வது திருத்த சட்டமூல விவாதத்தின் போது

# பாராளுமன்றைப் பகிஷ்கரிக்க

# தமிழர் விடுதலைக் கூட்டணி முடிவு

## புலிகளின் தடையைநீக்கவும்வலியுறுத்து

(நமது அரசியல் நிருபர்)

சுயாதீன ஆணைக்குழுக்கள் அமைப்பது தொடர்பான 17வது அரசியல் திருத்தசட்டமூலம் இம்மாதம் 24ம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்போது அது தொடர்பான விவாதத்தைப் பகிஷ்கரிக்கப் போவதாகத் தமிழர் விடுதலைக் கூட்டணி முடிவுசெய்துள்ளது.

17வது அரசியல் சட்டதிருத்தமூல விவாதத்தைப்பகிஷ்கரிக்கும் நடவடிக்கைக்கு அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ், ரெலோ ஆகியவற்றின் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவையும் பெறும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

ஐக்கிய தேசியக் கட்சி ஜே.வி.பி ஆகியவற்றின் அனுசரணையுடன் நான்கு சுதந்திர ஆணைக் குழுக்கள் நியமிப்பது தொடர்பான 17வது அரசியலமைப்பு சட்ட திருத்த மூலம் இம்மாதம் 24ம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் படவுள்ளது.

தேசியப்பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் அர்த்தமற்ற யுத்தத்தை முன்னெடுத்துச் செல்லும் முயற்சிகளை நாம் ஆதரிக்க முடியாது.

அரசாங்கமும் எதிர்க்கட்சிகளான ஐக்கியதேசியக் கட்சியும், ஜே.வி.பியும் ஒன்றிணைந்துஆணைக்குழு அமைப்பதில் இணக்கப் பாட்டிற்கு வரமுடியுமானால்தேசியபிரச்சினையான இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு ஏதுவாக விடுதலைபுலிகள்மீதான தடையைநீக்கி அவர்களுடன்பேசுவதற்குஇக் கட்சிகள் ஒன்றிணைந்து செயற்பட முடியாதது ஏன்என்று தமிழர் விடுதலைக் கூட்டணி கேள்வி எழுப்பி உள்ளது.

(8ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்கட்சிகளின் ஆதரவு பெறுவதில்

## அரசுமும்முரம்;கூட்டணியுடன் பேச்சு

பொது ஜன ஐக்கிய முன்னணி அரசு தமிழ் அரசியல் கட்சிகளின்ஆதரவைப்பெறுவதில் தற்போது மும்முரமாக ஈடுபட்டுள்ளது.

அரசுக்கும் ஜே.வி.பி க்கும் இடையில் ஏற்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கை எந்நேரமும் கிழித்தெறியப்படலாம் என்ற எதிர்பார்ப்புடனேயே தமிழ் அரசியல் கட்சிகளின் ஆதரவைப் பெறுவதில் அரசு மும்முரமாக ஈடுபட்டுள்ளதாக தெரியவருகிறது.

அரசுக்கு ஜே.வி.பி விதித்துள்ள நிபந்தனைகளினால் சிக்கித் தடுமாறும் அரசு தமிழ்க்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவைப் பெறக்கூடிய சகல நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ளது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் சுமுகமான சூழ்

(8ஆம் பக்கம் பார்க்க)

## பின்லேடனைபாதுகாப்பதில்

## 13ஆயிரம் படையினர்

### காபூலைவிட்டு மக்கள் வெளியேற்றம்

(காபூல்)

அமெரிக்கா ஆப்கான்மீது தாக்குதலை நடத்தலாம் என்ற காரணத்தால்ஒஸாமா பின்லேடனும் அவரதுகுடும்பமும் கண்டகார் நகரில் இருந்து வெளியேறி இரகசியமான இடமொன்றிற்கு சென்றுள்ளதாகவும் 13 ஆயிரம் பேரைக்கொண்ட விசேட படையணி யொன்று அவரின் பாதுகாப்யை உறுதிப்படுத்தி வருவதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

ஆப்கான்மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தலாம்என்ற அச்சத்தில் பல்லாயிரக்கணக்கானமக்கள் தலைநகர் காபூலை விட்டுவெளியேறிவருவதாகவும் இவர்கள்பாகிஸ்தானுக்குச் செல்லும் பட்சத்தில்

(8ஆம் பக்கம் பார்க்க)

## அரசு . ஜே வி. பி

## சந்திப்பு

17 வது சட்ட திருத்தம் தொடர்பான இறுதிக்கட்ட பேச்சுவார்த்தை பொது ஜன ஐக்கிய முன்னனி அரசுக்கும் ஜே.வி.பிக்குமிடையில் நேற்றிரவு ஆரம்பமாகியது.

இது பற்றி ஜே.வி.பி;பிரசார செயலாளர் விமல் வீரவன்ச கருத்துத் தெரிவிக்கையில் எதிர்வரும் 24 ஆம் திகதி பாராளுமன்றத்திற்கு

(8ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் மங்களவின் பதவி பறிப்பு

## ஆறுமுகம் பதவியேற்பு ரத்து

### ஜே.வி,பியின் கூட்டால் ஜனாதிபதிகுழப்பம்

(கொழும்பு)

இலங்கை தொழிலாளர் காங்கிரசின் தலைவர் ஆறுமுகம் தொண்டமானின் அமைச்சர்பதவியேற்புநிகழ்வு ரத்துச் செய்யப் பட்டுள்ளது.

நேற்று கால்நடைகள் அபிவிருத்தி தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சராகதொண்டமான் பதவி ஏற்க இருந்த போது ஜனாதிபதி செயலகம் பதவி ஏற்பை ஒத்தி வைத்ததால் அவர்அமைச்சராகசத்தியப் பிரமாணம்செய்துகொள்ளவில்லை.

ஜே.வி.பி: விதித்த கடும் நிபந்தனைக்கு அமைய20 அமைச்சர்கள் பதவிஏற்றுள்ள நிலையில் புதிய ஒருவரை அமைச்சராக நியமிப்பதில் சிக்கல் உள்ளது.

இதனாலேயே தொண்டமானின் பதவி ஏற்புநிகழ்வு இறுதி நேரத்தில் ரத்து செய்யப்பட்டதாக தெரியவருகிறது.

(8ஆம் பக்கம் பார்க்க)

## பருத்தித்துறைச் சமரில்

## 10 புலிகள் உயிரிழப்பு

(வவுனியா)

பருத்தித்துறை கடற்பரப்பில் நேற்றுமுன்தினம் படையினருடன் ஏற்பட்ட சமரில் கடற்புலிகளின் துணைத்தளபதி ● லெப். கேணல் இரும்பொறை மாஸ்ரர் (சிவராஜா கலைச்செல்வன், திருமலை)
● லெப். கேணல் குமுதன் (தவராசா ஞானேஸ்வரன், யாழ். மாவட்டம்)
● மேஜர் சிவகாந்தன் / காந் (சாந்தகுணவடிவேல் ரவீந்திரகுமார், யாழ் மாவட்டம்)
● மேஜர் நளன் (செல்வராசா செல்வகுமார் யாழ் மாவட்டம்)
● கப்டன் எழிலரசன் (நாகமணி மணிவண்ணன், யாழ்

(8ஆம் பக்கம் பார்க்க)

## இரண்டுடோறா மூழ்கடிப்பு

## எட்டு டோறா சேதம்

### புலிகள் அறிவிப்பு

திருமலையிலிருந்து 1260 இற்கும் மேற்பட்ட படையினரை காங்கேசன்துறைக்கு ஏற்றி வந்த 'த பிறைட் ஒவ் சவுத்' கப்பல் மீது பருத்தித்துறை கடலில் வைத்து நேற்றுமுன்தினம் தமிழீழ விடுதலை புலிகளின் கடற் புலிகளும், கடற்கரும்புலிகளும் இணைந்து நடத்திய தாக்குதலில் இரண்டு டோறாப் படகுகள் மூழ்கடிக்கப் பட்டதுடன், எட்டு டோறாப் படகுகளும் கப்பலும் சேதமடைந்ததாகவும்புலிகளின்குரல்வானொலி நேற்றிரவு அறிவித்துள்ளது.

பருத்தித்துறைக் கடலில் வைத்து விடுதலைப்புலிகளினால் மேற்கொள்ளப்பட்ட இத்தாக்குதலில் புலிகளின் தரப்பில் 6 கடற்புலிகளும், 4கடற்கரும்புலிகளும் வீரச்சாவடைந்ததாகவும் புலிகளின் குரல் தெரிவித்துள்ளது.

இத்தாக்குல் தொடர்பாக புலிகளின்குரல் வானொலி மேலும் தெரிவிக்கையில் நேற்றுமுந்தினம் அதிகாலை 4.30மணிதொடக்கம் நண்பகல் 12.45மணிவரை இச்சமர் நீடித்ததாகவும் இச்சமரின்போது 75க்குமேற்பட்ட படையினர் கொல்லப்பட்டிருக்கலாம் அல்லதுபடுகாயமடைந்திருக்கலாம் என்றும் அறிவித்துள்ளது. [ம]

## 'லங்காமுடித்த' "சிற்றிஒவ் றிங்கோ"

## இன்றுதிருமலை புறப்படும்

## 35பேருக்குஇடவசதியுண்டு

[யாழ்ப்பாணம்]

லங்கா முடித்த, சிற்றி ஒவ்றிங்கோ ஆகிய இருகப்பலும் இன்று பயணிகளை ஏற்றிக்கொண்டுதிருமலை புறப்படுமென றான் அலுவலகம் அறிவித்துள்ளது.

கப்பல் பயணச் சீட்டுப் பெற்ற பயணிகளை, பயண ஏற்பாட்டுடன் இன்று காலை 6 மணிக்கு றான் அலுவலகம் அமைந்துள்ள யாழ் ஸ்ரான்லி வீதி மணியம் கட்டிடத்திற்கு வருகை தருமாறும் கேட்கப் பட்டுள்ளது.

இதேவேளை இன்று புறப்படும் சிற்றி ஒவ் றிங்கோ கப்பலில் 35 பயணிகளுக்கு ஆசனங்கள் இருப்பதாகவும் இதில் செல்ல விரும்புவோர் பாதுகாப்பு அனுமதியுடன் நாளைக் காலை 6 மணிக்கு றான் அலுவலகத்திற்கு வருகை தருமாறும் கேட்கப்பட்டுள்ளது. (ந)

## மாணவன் திவ்வியனின் வழக்கு

## யாழ். மேல் நீதிமன்றில்

### தொல்லை தவிர்ப்புக்குழு அறிவிப்பு

(கொழும்பு)

இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட யாழ்பல்கலைக்கழக மாணவன் கிருஷ்ணசாமி திவ்வியன்தொடர்பான வழக்கு யாழ் மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்படவுள்ளதாக சட்டமா அதிபர் நேற்று தொல்லை தவிர்ப்பு குழுவுக்கு அறிவித்துள்ளதாக குழுவின் செயலர் சட்டத்தரணி எஸ். பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

இந்த வழக்கு அவசரகாலச் சட்டம் மற்றும் பயங்கரவாதச்சட்டங்களின் கீழ் தாக்கல் செய்யப்படவுள்ளது.

தொல்லை தவிர்ப்புக்குழு நீதியமைச்சர் பட்டிவீரக்

(8ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# தேசிய போலியோ தடை மருந்து கொடுக்கும் தினங்கள் - 2001

## யாழ். மாவட்டம்

போலியோ நோயை மூற்றாக இந்நாட்டிலிருந்து ஒழிக்கும் நோக்குடன் கடந்த ஆறு வருடமாக போலியோ சொட்டுமருந்து கொடுக்கப்பட்டு வருகின்றது. தென்னிலங்கையில் கூடிய முன்னேற்றம் காணப்பட்ட போதிலும் வட கிழக்கு மாகாணங்களில் கீழ் குறிப்பிட்ட காரணங்களால் இதில் எதிர்பார்த்த முன்னேற்றம் காணப்படவில்லை.

1. காலத்திற்குக் காலம் மக்கள் இடம் பெயர்வதால் பிள்ளைகளைத் தேடிக் கண்டுபிடித்து மருந்து கொடுப்பதில் உள்ள சிரமம்.
2. இடம்பெயர்வு காரணமாக மக்கள் குறிப்பிட்ட இடங்களில் நெரிசலாக வாழ்கின்றபடியால் சுகாதாரத்தைப் பேணுவது குறைவாகக் காணப்படுகின்றது.

இக்காரணங்களால் வட,கிழக்கில் இந்நோய் மறைமுகமாக இருக்கலாமென ஐயப்பாடு உண்டு. எனவே இவ்வருடமும் செப்டெம்பர் 22ந் திகதியும், ஒக்டோபர் 20ந் திகதியும் இரு தடவைகள் (05) ஐந்து வயதிற்குட்பட்ட சகல பிள்ளைகளுக்கும் போலியோ மருந்து கொடுக்க சுகாதார அமைச்சுத் தீர்மானித்துள்ளது.

யாழ். மாவட்டத்திலுள்ள சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலுள்ள கீழ்க் குறிப்பிட்ட நிலையங்களில் போலியோ தடை மருந்து கொடுப்பதற்கான ஏற்பாடுகளை யாழ். மாகாண பிரதிப் பணிப்பாளர் சுகாதார சேவைகள் மேற்கொண்டுள்ளார். இந் நிலையங்களில் காலை 8.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை தடை மருந்து வழங்கப்படும். 5 வயதிற்குட்பட்ட பிள்ளைகளுக்கு முன்பு பல தடவைகள் கொடுக்கப்பட்டிருந்தாலும் இம்முறையும் இது கட்டாயமாகக் கொடுக்கப்பட வேண்டும். என வலியுறுத்தப்படுகின்றது. நூற்றுக்கு நூறு வீதமான பிள்ளைகளுக்குத் தடை மருந்து கொடுப்பதன் மூலம் இக்கொடிய நோய் எமது பிள்ளைகளுக்கு வராமல் தடுப்பது மட்டுமல்லாது எம் நாட்டிலிருந்தே முற்றாக இந்நோயை ஒழித்து விட முடியும்.

சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு ரீதியான சிகிச்சா நிலையங்களின் பெயர்ப் பட்டியல் கீழே தரப்படுகின்றது.

### சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, தெல்லிப்பழை

1. ஆரம்ப சுகாதார நிலையம், தாவடி
2. ம.ம. இணுவில்
3. இணுவில் மத்திய கல்லூரி
4. ம.ம. , உடுவில்
5. மல்வம் சேச்
6. உடுவில் மேற்கு அந்திரான்
7. இராமநாதன் கல்லூரி, மருதனார்மடம்
8. ம.ம. , சுன்னாகம்
9. யா/ஸ்கந்தவரோதயாக் கல்லூரி
10. ம.ம.ம.ம. , அளவெட்டி
11. ஆ.சு. நிலையம், சங்குவேலி
12. மல்லாகம் சிகிச்சை நிலையம் (தெல்லிப்பழை)
13. ம.ம. , புன்னாலைக்கட்டுவன்
14. ம.ம. , ஏழாலை
15. மயிலங்காடு சிகிச்சை நிலையம்
16. ஏழாலை மாதர் சங்கம்
17. ஏழாலை பிரதேச சபை
18. வசாவிளான் சிகிச்சை நிலையம்
19. ஆ.சு. நிலையம் குளமங்கால்
20. ஆ.சு. நிலையம் ஈவினை
21. பன்னாலை சிகிச்சை நிலையம்
22. தாவடி காளி கோவிலடி
23. இணுவில் கலாஜோதி வாசிகசாலை
24. கல்லாரை
25. பன்னாலை

### சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, பருத்தித்துறை

1. சோளன்கள் சிகிச்சை நிலையம்
2. மணியகாரன் தோட்டம் பாடசாலை
3. ஆதார வைத்தியசாலை, பருத்தித்துறை
4. வல்லிபுரக்குறிச்சி கிராம அலுவலர் காரியாலயம்
5. திக்கம் சிகிச்சை நிலையம்
6. அல்வாய் பிரதேச சபை பணிமனை
7. அத்தாய் விநாயகர் பாடசாலை
8. வியாபாரி மூலை சிகிச்சை நிலையம்
9. சென்.அன்ரனி சிகிச்சை நிலையம்
10. மாதனை மாதர் சங்கம்
11. கற்கோவளம் சிகிச்சை நிலையம்
12. தம்பசிட்டி கதிரவேற்பிள்ளை சனசமூக நிலையம்
13. பருத்தித்துறை மத்திய மருந்தகம்
14. விக்கினேஸ்வரா சிகிச்சை நிலையம்
15. வதிரி சிகிச்சை நிலையம்
16. கப்பூது வாசிகசாலை
17. கரவெட்டி மத்திய மருந்தகம் மகப்பேற்று மனை
18. இராஜ கிராமம் சிகிச்சை நிலையம்
19. கிழவித் தோட்டம் வாசிகசாலை
20. கட்டைவேலி சனசமூக நிலையம்
21. கோயிற்கடமை சனசமூக நிலையம்
22. அம்பிகை பாலர் பாடசாலை
23. உடுப்பிட்டி சனசமூக நிலையம்
24. பாரதி சனசமூக நிலையம்
25. இலகடி சனசமூக நிலையம்
26. இமையாணன் மாதர் சங்கம்
27. கலையகள் பாலர் பாடசாலை
28. உடுப்பிட்டி பிரதேச சபை
29. மாவட்ட வைத்தியசாலை வல்வெட்டித் துறை
30. வளர்மதி பாலர் பாடசாலை தொண்டைமானாறு
31. கொற்றாவத்தை அ.த.க. , பாடசாலை
32. பொலிகண்டி இ.த.க. பாடசாலை
33. கொற்றாவத்தை அ.மி.த.க., பாடசாலை
34. வல்வெட்டி இ.த.க, பாடசாலை
35. அம்பன் அ.ம.த.க. , பாடசாலை
36. மணற்காடு பாலர் பாடசாலை
37. குடத்தனை சிகிச்சை நிலையம்
38. பொற்பதி வாசிகசாலை

### சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, யாழ்ப்பாணம்

1. சிறுவர் பூங்கா பாலர் பாடசாலை
2. ஈச்சமோட்டை பாலர் பாடசாலை
3. திருநகர் சனசமூக நிலையம்
4. குருநகர் சிகிச்சா நிலையம்
5. ஆ வே மரியாள் பாலர் பாடசாலை
6. யூப்ளி மகப்பேற்று நிலையம் -1
7. யூப்ளி மகப்பேற்று நிலையம் -2
8. ஆயுர்வேதக் கல்லூரி
9. போதனா வைத்தியசாலை
10. கொட்டடி பாலர் பாடசாலை
11. நாவலர் சிகிச்சா நிலையம்
12. நாவாந்துறை றோமன் கத்தோலிக்க பாடசாலை
13. சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம், கண்டி வீதி
14. காந்தி சனசமூக நிலையம், அரியாலை
15. ஞானக்குழந்தை பாலர் பாடசாலை, சிவப்பிரகாசம் வீதி
16. வள்ளுவன் சனசமூக நிலையம், வண்ணார் பண்ணை
17. அங்கர் பாமசி மூன்-ரவி வீடு
18. கந்தர்மடம் சிகிச்சா நிலையம்
19. செட்டித்தெரு சனசமூகநிலையம், நல்லூர்
20. நல்லூர் சிகிச்சா நிலையம்
21. மூத்தவிநாயகர் சனசமூக நிலையம்
22. வண்ணார்பண்ணை சிகிச்சா நிலையம்

### சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, மானிப்பாய் போலியோ தடுப்பு மருந்து வழங்கும் நிலையங்களின் பெயர்.

1. சுற்றயல் கூறு, சங்கானை
2. ஆரம்ப சுகாதார நிலையம் , பண்ணாகம்
3. மத்திய மருந்தகம், தொல்புரம்
4. ஐக்கிய சங்கப் பாடசாலை, சுழிபுரம்
5. மத்திய மருந்தகம், வட்டுக்கோட்டை
6. வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி
7. கிராமிய வைத்தியசாலை, வட்டுக் கோட்டை
8. அராலி தெற்கு சரஸ்வதி மகா வித்தியாலயம்
9. சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை மானிப்பாய்
10. கிராமிய வைத்தியசாலை, பண்டத்தரிப்பு
11. மத்திய மருந்தகம், இளவாலை
12. சனசமூக நிலையம் மாகியப்பிட்டி
13. மானிப்பாய் லயன்ஸ் கழகம்
14. சனசமூக நிலையம், சுதுமலை
15. ஆரம்ப சுகாதார நிலையம் சாவற்கட்டு
16. ஆரம்ப சுகாதார நிலையம் முள்ளி, ஆனைக்கோட்டை
17. வை.எம்.சி.ஏ, நவாலி

### சுகாதார வைத்திய அதிகாரி சாவகச்சேரி

1. மிருசுவில் வடக்கு பாடசாலை
2. கச்சாய் பிரதேச சபை
3. மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம்
4. கைதடி வடக்கு அம்பிகா மாதர் சங்கம்
5. கைதடி தெற்கு சமநல சேவை நிலையம்
6. வரணி ம.ம.ம.ம

### சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை கோப்பாய்

1. இடைக்காடு சிகிச்சை நிலையம்
2. சுற்றயல்கூறு அச்சுவேலி
3. மத்திய மருந்தகம் புத்தூர்
4. ஆரம்ப சுகாதார நிலையம், வாதரவத்தை
5. சிறுப்பிட்டி சிகிச்சா நிலையம்
6. அச்செழு சிகிச்சா நிலையம்
7. நீர்வேலி சிகிச்சா நிலையம்
8. ஊரெழு சிகிச்சா நிலையம்
9. உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்
10. சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, கோப்பாய்
11. மாதா கோவிலடி. இருபாலை
12. கட்டப்பிராய் சிகிச்சா நிலையம்
13. கல்வியங்காடு சைவப்பாடசாலை
14. திருநெல்வேலி கலாமன்றம்
15. மத்திய மருந்தகம் கொக்குவில்
16. கிராமிய அபிவிருத்திச்சங்கம் கொக்குவில்
17. மத்திய மருந்தகம் மகப்பேற்று மனை, கோண்டாவில்
18. குசையப்பர் கோவிலடி
19. கிராமசபை, புத்தூர்
20. ஆரம்பப் பாடசாலை சைவத்தமிழ், உரும்பிராய்
21. செருக்சப்புலம் அன்னங்கை சிகிச்சா நிலையம், கோண்டாவில்

### சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை ஊர்காவற்றுறை

1. மாவட்ட வைத்தியசாலை, ஊர்காவற்றுறை
2. தம்பசிட்டி சனசமூக நிலையம்
3. மெலிஞ்சிமுனை சேச்
4. ஆரம்ப சுகாதார நிலையம் புளியங்கூடல்
5. ஆரம்ப சுகாதார நிலையம் நாரந்தனை
6. சுற்றயல்கூறு காரைநகர்
7. களபூமி கிராம அலுவலர் காரியாலயம்
8. வாரிவளவு ஆரம்பப் பாடசாலை
9. சுற்றயல் கூறு அனலைதீவு
10. ஆரம்ப சுகாதார நிலையம் எழுவைதீவு
11. கிராமிய வைத்தியசாலை வேலணை
12. சாட்டிமாதா சேச்
13. பராசக்தி வித்தியாலயம்
14. மண்டைதீவு
15. மாவட்ட வைத்தியசாலை புங்குடுதீவு
16. சுற்றயல்கூறு நயினாதீவு
17. மாவட்ட வைத்தியசாலை நெடுந்தீவு
18. நெடுந்தீவு மேற்கு நிலையம்
19. சுப்பிரமணியம் வித்தியாலயம்

(C-2607)

### நாட்டில் நிலவுகின்ற
# பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண
# தேர்தல் நடத்துவது அவசியம்
## மு. கா. தலைவர் அபிப்பிராயம்

(கொழும்பு)
நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு பொதுத் தேர்தல் ஒன்று நடத்தப்பட வேண்டும் என்று முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

மறைந்த முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமானஎம்.எச்.எம்.அஷ்ரப்பின நினைவு தினக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; பொதுத் தேர்தல் ஒன்றை நடத்துவதற்கான சூழ்நிலைகளை உருவாச்குவதில் சிறிலங்கா முஸ்லிம காங்கிரஸ் முழுமூச்சுடன் செயற்படுகின்றது.

பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் ஒரு பொது இணக்கப்பாட்டைஏற்படுத்துவதற்கு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஈடுபட்டது.

ஆனால், சிலரது சுயலாபம் கருதும் போக்கினால் எமது முயற்சி பலிதமாகவில்லை என்று மேலும் தெரிவித்தார். (உ-4)

## கரவெட்டி மக்கள் குடிநீருக்காக அலைச்சல்

(யாழ்ப்பாணம்)
கரவெட்டிப் பகுதியில் குடிநீருக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுவதால் அப்பகுதிப் பொதுமக்கள் அலைச்சல்களுக்கும், துன்பங்களுக்கும் ஆளாவதாகத் தெரியவந்துள்ளது.

மேற்படி பகுதி மக்களின் குடிநீர்த் தேவையை நிவர்த்தி செய்[illegible]ந்த அத்துளு அம்மன் கோவிலடி, அத்துளு கட்டையடி ஆகியஇரு நன்னீர்க் கிணறுகளும் நீர் வற்றிய காரணத்தினால் இவ்விரு கிணறுகளுக்கும் அண்மையில் இவ்விரண்டு குழாய்க்கிணறுகள அமைக்கப்பட்டு மக்களின் குடிநீர்த் தேவை பூர்த்தி செய்யப்பட்டு வந்தது.

இந்நிலையில், சில காலங்களாக கான்பம் பழுதடைந்துள்ளதால் பொதுமக்கள்குடிநீரைப் பெறபெரிதும் சிரமப்பட்டு வருவதாகக் கூறப்படுகின்றது. (உ-4)

## சாராயத்தின் விலை குறைப்பு

(புலோலி)
திக்கம்வடிசாலையின் சாராயத்தின் விலை 10 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது வரை 195 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டு வந்த 1போத்தல் சாராயம் 185 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படுமென திக்கம்வடிசாலை பொது முகாமையாளர் பீ. இரவீந்திரன் தெரிவித்தார். [உ-52]

## மத்திய கல்லூரி மாணவர் இருவர் ஒரேநாளில் கைது

(யாழ்ப்பாணம)
கடந்த ஞாயிறன்று யாழ். மத்திய கல்லூரிமாணவர்கள் இருவர் படையினரால் கைது செய்யப்பட்டிருப்பது தொடர்பாக அவர்களது உறவினர்களால் யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழுவில் தனித்தனியே முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மாரியம்மன் வீதி திருநெல்வேலியைச் சேர்ந்த சுப்பிரமணியம் பிரதீபன் (வயது21) என்பவரை அதிகாலை 5.30 மணியளவிலும்,

கொக்குவிலைச் சேர்ந்த செபஸ்ரியன் பிரதீபன் (வயது 19) என்பவரை அதிகாலை 5.45மணியளவிலும் ஞான பண்டிதர்பாடசாலை அருகில் வைத்து படையினர் கைது செய்திருந்ததாக முறைப்பாடுகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-10)

## இராசி பலன்

18/09/2001
புரட்டாதி 02 செவ்வாய்
பிரதமை பி. ப. 2.41 வரை
உத்தரம் மு. ப. 9.12 வரை
ராகுகாலம் 3.03 – 4.33
சுபநேரம் 10·33– 12.03

**மேடம்**
காரிய அனுகூலம், மன மகிழ்ச்சி, தொழில் நன்மை, உடல் நலம்.

**இடபம்**
ரோக பயம், மனக்கவலை, காரிய தாமதம், கௌரவச் குறைவு.

**மிதுனம்**
மனத்தளர்வு, உறவினர் வெறுப்பு, முயற்சி தாமதம், குடும்ப சுகம்.

**கடகம்**
நினைத்த காரியம் கைகூடும், தனவரவு, வாக்கு மேன்மை, கூட்டு முயற்சி.

**சிங்கம்**
பொருள் விரயம், காரிய தாமதம், வீண் விவாதம், கௌரவக் குறைவு;

**கன்னி**
காரியம் கைகூடும், மனக் குழப்பம், நண்பர் உதவி, சயன சுகக்குறைவு.

**துலாம்**
அலைச்சல், பணச் செலவு, உணர்ச்சி வசப்படல், காரிய தாமதம்.

**விருச்சிகம்**
எதிர்பாராத நன்மை, நண்பர் உதவி, மன மகிழ்ச்சி, மதிக்கப்படல்;

**தனுசு**
அதிகாரம், கடின உழைப்பு, நல்ல செய்தி, உத்தியோக நன்மை;

**மகரம்**
நிலை மாற்றம், மனப் பதட்டம், உடல் வியாதி, காரிய தாமதம்.

**கும்பம்**
காரியத் தடங்கல், உடல் சோர்வு வீண் தொல்லை, பிரயாண பயம்.

**மீனம்**
வரவேற்பு, பிரயாணம், முயற்சி பலிதம், கீர்த்தி.

[பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது]

வளவன்.

## சிங்களப் பெண்ணிடம் பிரபாவின் புகைப்படம்

[வவுனியா)
சிங்களப் பெண் ஒருவரிடம் இருந்து தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் புகைப்படம் மீட்கப்பட்டுள்ளது.

மடுமாதா தேவாலய திருவிழாவுக்குச் சென்றுவிட்டுத் திரும்பியதென்னிலங்கையைச் சேர்ந்த சிங்களத் தாய் ஒருவரிடம் இருந்தே பிரமனாலங்குளம் சோதனைச் சாவடியில் மேற்படி புகைப்படம் கைப்பற்றப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

பிரபாகரன் மீது கொண்ட அபிமானம் காரணமாக மடுமாதா தேவாலய திருவிழாக் கடையில் அவரின் புகைப் படத்தை வாங்கியுள்ளதாக அப்பெண் தெரிவித்துள்ளார். [உ]

## குடிநீர் கிணறுகள் மக்கள் பாவனைக்கு

(யாழ்ப்பாணம்)
நீர்வேலி மேற்கு கிராம சேவையாளர் பிரிவில் பட்டினிக்கு எதிரான நிறுவனத்தினால் புனரமைக்கப்பட்ட குடிதண்ணீர் கிணறுகளைப் பொதுமக்களின் பாவனைக்காக திறந்து வைத்தல் நிகழ்வும், அவற்றினைச் சுகாதார முறைப்படி பேணுவது தொடர்பான பயிறசிப் பட்டறையும் அண்மையில் இடம் பெற்றது. (உ)

### செயற்பாட்டறை
## நிர்மாணிப்பு

(புலோலி)
வடமராட்சி கிழக்கு குடத்தனை அமெரிக்கன் மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலையில் சுமார் 90 ஆயிரம் ரூபா செலவில் ஆரம்பப் பிரிவுக்கான செயற்பாட்டறை ஒன்று நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது. இச் செயற்பாட்டறையை நிர்மாணிப்பதற்கான நிதியைக் கல்வியமைச்சு ஒதுக்கீடு செய்துளளது; (செ-52)

## நீலவண்ண மேனியனே

(இக்கவிதை கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ வல்லிபுரநாதர் கோயில் கொடியேற்றத்தை முன்னிட்டு பிரசுரமாகின்றது)

ஆதிசேடன் மீது அனந்த சயனம் செய்து
அகிலம் காக்கும் அனந்தா
நீதியான சமாதானம் நிகழ வேண்டும் என்று
நீலமேனி வல்லிபுர நாதா கொடியேறு இன்று

கோண்டாவிலூர் து.ஜேந்திரன்

# செய்தித் துளிகள்

### 10 ஆம் ஆண்டு
## நிறைவு விழா

(யாழ்ப்பாணம்)
யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கத்தின் 10 ஆம் ஆண்டு நிறைவு விழா நாளை காலை 9.00 மணிக்கு யாழ். அலுவலக வளாகத்தில் இடம்பெறவுள்ளது. (உ)

## ஏற்றி இறக்கும் பணி வழமைக்கு

(வடமராட்சி கிழக்கு)
பருத்தித்துறை கடற்பரப்பில் நேற்றுமுன்தினம் அதிகாலை இடம்பெற்ற அசம்பாவிதங்களால் இடைநிறுத்தப்பட்ட கப்பலில்இருந்து பொருட்கள் ஏற்றிஇறக்கும் பணி நேற்று வழமைபோன்று இடம்பெற்றதாகத் தெரியவந்துள்ளது: (உ-43)

## குழந்தை தத்தெடுப்பு

(புலோலி)
பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரியின் கண்காணிப்பில் வைத்தியசாலையில் சுமார் மூன்றரை மாதங்களாகப் பராமரிக்கப்பட்டு வந்த பெண் குழந்தையை இளம் ஆசிரியக் குடும்பமொன்று தத்தெடுத்து வளர்ப்பதற்கு பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது: (உ-52)

## போலியோ சொட்டு மருந்து 22 நிலையங்களில்

(யாழ்ப்பாணம்)
தேசிய நோய்த்தடுப்புத் தினத்தை முன்னிட்டு இம் மாதம் 20 ஆம் திகதியும். வரும் மாதம் 22 ஆம் திகதியும் யாழ் மாநகரசபை எல்லைக்குட்பட்ட 22 நிலையங்களில் போலியோ தடுப்பு மருந்து காலை 7.30 மணிமுதல் பி. ப 4.30 மணி வரை வழங்கப்படவுள்ளது.

முன்னர் போலியோத் தடுப்பு மருந்து வழங்கிய வழங்கப்படாத 5 வயதிற்குட்பட்ட சகல குழந்தைகளுக்கும் தவறாது போலியோ சொட்டு மருந்துகளைப் பெற்றுவழங்குமாறு யாழ். மாநகரசபை பதில் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர். ம. மரியதாசன் மாநகரசபைக்கு உட்பட்ட மக்களைக் கேட்டுள்ளார். (உ)

## இன்று சாகித்திய விழா

(வடமராட்சி கிழக்கு)
வடமராட்சி கிழக்கு மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவின் சாகித்தியவிழாஉதவி அரச அதிபர் வி.ப. வேலாயுதம்பிள்ளை தலைமையில் இன்று குடத்தனை நூல் நிலையத்திற்கு அருகில் உள்ள கட்டடத்தில் நடைபெற உள்ளது. (செ-43)

### தந்தைசெல்வா
## வரலாறு
### குறுந்திரைப்படம்

(யாழ்ப்பாணம்)
தந்தை செல்வா மறைந்து இருபத்தைந்து ஆண்டு நிறைவை முன்னிட்டு அடுத்த வருடம் (26- 04- 2002) தந்தையின் பாராளுமன்ற உரைகள், மகாநாட்டுத் தலைமை உரைகள், அவர் பற்றிய பத்திரிகைச் செய்திகள் புகைப் படங்கள் ஆகியவற்றைத் தொகுத்து ஆவணமாக வெளியிடவும்.

இவரைப் பற்றிய குறுந் திரைப்படம் வெளியிடவும், வருடா வருடம் நினைவுப் பேருரைகளை நடத்தவும் தந்தை செல்வா அறங்காவற் குழு தீர்மானம் செய்துள்ளது: (செ)

### கரப்பந்தாட்ட
## சுற்றுப் போட்டி

(சுண்டுக்குளி)
புனித மரியன்னைபேராலய இளைஞர் உருவாக்கல் இயக்கம் அமரர் அருட்திரு ஜெபநேசன் அடிகளாரின் ஞாபகார்த்தமாக நடத்தி வரும் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் அரை இறுதி ஆட்டங்கள் இரண்டு கடந்த சனிக்கிழமை பேராலய விளையாட்டு அரங்கில் நடைபெற்றன.

முதலாவது இடம் பெற்ற ஆட்டத்தில் குருநகர் பாடும் மீன் அணி அதனை எதிர்த்து ஆடிய நாவாந்துறை சென். நீக்கிலஸ் அணியை இருநேர் செற்றுக்களில் 16:14, 15:11 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்று இறுதி ஆட்டத்திற்குத் தகுதி பெற்றது.

அதனைத் தொடர்ந்து இடம் பெற்ற இரண்டாவது அரை இறுதி ஆட்டத்தில் திருநகர் பாரதி விளையாட்டுக் கழக அணி அதனை எதிர்த்து ஆடிய கொழும்புத்துறைஜெறலைன் விளையாட்டுக் கழக அணியை 2:1 என்ற செற் கணக்கில்5:15, 15:9, 15:12 என்ற புளளிகள அடிப்படையில் வென்று இறுதி ஆட்டத்திற்கு தகுதி பெற்றது. (உ-110)

## கிரிக்கெட்
### சுற்றுப் போட்டி

(சுண்டுக்குளி)
இளம் கிரிக்கெட்வீரர்களை ஊககுவிக்கும்வகையில்யாழ். புனித சாள்ஸ் மகாவித்தியாலயத்தின் 125 வது ஆண்டு நிறைவையொட்டி பழைய மாணவர் சங்கம் 15 வயதுக்கு உட்பட்டவர்களுக்கான மென பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டி ஒன்றை நடத்தவுள்ளது.

7 வீரர்களைக் கொண்ட 12 பந்துப்பரிமாற்றங்களை உள்ளடக்கி விலகல் முறையில் இப்போட்டி அமையவுள்ளது; (உ-110)

## கூட்டம்

(துன்னாலை)
பிரதேச சிறுவர்பாதுகாப்பு உரிமை சம்பந்தமான குழுக் கூட்டம் நாளை புதன்கிழமை பி.ப 2.30 மணிக்கு பிரதேச செயலக காரியாலயத்தில் நடைபெறும் என பருத்தித்துறை பிரதேச செயலர் ஆ. சிவசுவாமி தெரிவித்தார்; (செ-41)

## வருடாந்த மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)
கோண்டாவில் கிழக்கு ஸ்ரீவல்லிபுரநாதர் ஆலயவருடாந்த மஹோற்சவம்இன்று செய்வாய்க்கிழமை காலை 10.00 மணிககு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்து தினங்கள் திருவிழா இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 26ம் திகதி தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும இடம்பெறவுள்ளது; (செ-104)

## மூளை மலேரியாத் தாக்கம்

(வடமராட்சி கிழக்கு)
வடமராட்சி கிழக்குப் பகுதியில் மூளை மலேரியாநோயின் தாக்கம் அதிகரித்துள்ளது.

நாளாந்தம் ஒருவர் வீதம் மூளை மலேரியா நோயினால் பீடிக்கப்பட்டு சிகிச்சை பெறுகிறார்கள் என வைத்தியசாலைவட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதனையடுத்து குடத்தனை, மணற்காடு, அம்பன் பகுதிகளில் மலத்தியோன் விசிறும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது: (செ-43)

# வடமராட்சி கடற்றொழிலாளருக்கு மாற்றுத் தொழில் வாய்ப்பு

## கெயர் திட்ட இணைப்பாளர் தெரிவிப்பு

(மந்திகை)

வடமராட்சி கடற்றொழிலாளர்களுக்கு மாற்றுத் தொழில்திட்டம் அமைப்பது குறித்து விரைவில் நடவடிக்கைமேற் கொள்ளப்படவுள்ளதாகவும் இது தொடர்பாக கெயர் திட்ட உயர் அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படும் என்றும் அந் நிறுவனத் திட்ட இணைப்பாளர் தெரிவித்துள்ளார்.

அண்மையில் கடற்றொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகளைச் சந்தித்த திட்ட இணைப்பாளர் கடற்றொழிலாளர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்ந்தார்.

கடந்த காலங்களாக கடற்றொழிலாளர்கள் மீன் பிடிப்பதில் எதிர் நோக்கும் பிரச்சினைகள், உயிராபத்துக்கள், ஸ்திரமற்ற தொழில் இதனால் ஏற்படும் வறுமை தொடர்பாக எடுத்துக் கூறப்பட்டது.

கடற்றொழிலாளர்கள் நிரந்தரமாக கடலில் மீன் பிடிக்க அனுமதிக்கும் வரை குடும்பங்களுக்கு அடுத்த ஆண்டிலிருந்து மாற்றுத் தொழில் திட்டம் ஒன்றினை மேற் கொள்ளுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டது.

இதனை ஏற்றுக் கொண்ட இணைப்பாளர் உரிய உயர் அதிகாரிகளுடன்இது தொடர்பாக ஆராயப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (க-123)

## மகளிருக்கான தொடர் பயிற்சி

[யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்டகூட்டுறவுச் சபையினால் கூட்டுறவுச் சங்கங்களின் மகளிருக்கான நான்கு நாள் தொடர் பயிற்சி நெறி கடந்த 15ம் திகதி முதல் யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபையின் வீரசிங்கம் மண்டப கட்டடத் தொகுதியில் நடைபெற்றுவருகின்றது.

இப் பயிற்சிக் கருத்தரங்கில் பல துறைகளையும் சேர்ந்த அறிஞர்கள் பலர் கருத்துரைகளை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். (க-15)

## பொ. ஐ. மு. அரசில் அதிருப்தியுற்றோர் புதிய அணியில் இணைவு

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசிலிருந்து அமைச்சர் பதவியை இராஜினாமாச்.செய்த எஸ். பி. திஸநாயக்கா தலைமையில் ஐக்கிய தேசிய முன்னணி என்ற பெயரில் புதிய அரசியல் கட்சி ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

அரசில்அதிருப்தியுற்று அமைச்சர் பதவிகளை இராஜினாமா செய்தவர்களான பேராசிரியர் ஜி. எல். பீரிஸ், மகிந்த விஜயசேகர உட்பட முன்னாள் பிரதியமைச்சர்களும் மற்றும் பல பாராளுமன்ற உறுப்பினர்களும், ஆரம்பிக்கப்படவுள்ள புதிய அரசியல் கட்சியில் இணையவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, எஸ்.பி.திஸநாயக்கா ஸ்ரீலங்காசுதந்திரக் கட்சியில் பெரும் செல்வாக்கு மிக்கவர் என்பதும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பொதுச் செயலாளராக தற்போது இருப்பதும் குறிப்பிடத்தக்கது. (உ,5)

## கருகிய நிலையில் இளைஞரின் சடலம்

தீயினால் எரிந்து உடல் கருகிய நிலையில் இளைஞர் ஒருவரின் சடலம் நேற்று முன்தினம் யாழ் போதனா வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்டது.

இச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு இரண்டு மணியளவில் ஆனைக்கோட்டை ஆறுகால் மடம் பகுதியில் இடம் பெற்றுள்ளது. மயிலு வீதி ஆறுகால் மடத்தைச் சேர்ந்த முத்துலிங்கம் அருளானந்தம் (வயது35) என்பவரே இவ்வாறு மரணமானவர் ஆவார்.

இது பற்றி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

இவர் ஒரு பட்டதாரி என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (செ-106)

## ஊர்காவற்றுறையில் சுகாதார நிகழ்ச்சிகள்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்குட்பட்ட பகுதிகளில் இன்று சுகாதாரக்கல்விநிகழ்ச்சிகள் இடம் பெறவுள்ளன.

அவ்வகையில் காலை 10. 00 மணிக்கு ஊர்காவற்றுறை போரூட் அலுவலகத்தில் திட்ட தொண்டர்களுக்கும், பி. ப. 1.00 மணிக்கு கரம் பொன் சிறிய புஷ்பம் மகளிர் மகாவித்தியாலயத்திலும் இந் நிகழ்ச்சிகள் இடம் பெறவுள்ளன.

இந் நிகழ்ச்சிகளில் உளநோய், புழுநோய், போஷாக்குணவு என்பன தொடர்பான கருத்துரைகளும், வீடியோப்படக் காட்சியும் இடம் பெறவுள்ளன. (செ-75)

## சிறுவர்களுக்குசெயல்திட்ட எழுத்தறிவூட்டல் வகுப்பு

(மந்திகை)

வடமராட்சிக் கல்வி வலய முறை சாராகல்வி பிரிவினால் சிறுவர்களுக்கான செயல் திட்ட எழுத்தறிவூட்டல் வகுப்புக்கள் நடத்துவதற்காக இரு பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

மணற் காடு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை, அம்பன் அமெரிக்கன்மிஷன் தமிழ்க்கலவன்பாடசாலை ஆகிய இருபாடசாலைகளுமே இவ்வாறு தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இப் பயிற்சி வகுப்புக்களை மிக விரைவில் நடத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வலயத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (செ23)

## நீராவியடிப் பிள்ளையார் ஆலய கேணி மூடுதல் விவகாரம் அப்பகுதிமக்கள் அதிருப்தி

(யாழ்ப்பாணம்)

தற்போது புனரமைக்கப்பட்டுவரும் யாழ். நீராவியடி பிள்ளையார் கோவிலின் பின்புறமாக அமைந்துள்ள கேணியின் ஒருபகுதி கோவில் நிர்வாகத்துக்கு பொறுப்பானவர்களால் மூடப்படவுள்ளதால் அதனால் எதிர்காலத்தில் பல சூழல் பிரச்சினைகள் ஏற்படும் என அப்பகுதி மக்கள விசனம் தெரிவித்துள்ளனர்.

நீண்டகால பழைமை வாய்ந்த மேற்படி கேணி கடந்தசில வருடங்களாக பராமரிப்பின்றி புற்கள் மண்டிக்கிடந்தது. இதனையடுத்து வடக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சின் நிதியுதவியுடன் இக்கேணி புனரமைக்கப்பட்டு வருகின்றது.

எனினும் மேற்படி கேணியின் பாதுகாப்பு கருதி தாம் கேணியின் ஒருபகுதியைமூட உத்தேசித்ததாக நிர்வாகத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மணிமண்டபம்

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய்ச் சீரணி நாகபூஷணி அம்மன் ஆலயத்திற்கு மணிமண்டபம் அமைக்கும் வேலைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (செ-104)

## போதையில் வந்தவரிடம் சைக்கிள் பறிப்பு; மனைவியால் முறியடிப்பு

(மந்திகை)

மது போதையில் வீதியில் சென்ற குடும்பஸ்தரின் சைக்கிள் ஒருவரால் கத்தி முனையில் பறிக்கப்பட்டு, பின்னர் அவரின் மனைவியின் முயற்சியால் மீட்கப்பட்ட சமபவம் அண்மையில் முறாவில் பகுதியில் இடம்பெற்றது.

இச்சம்பவம்பற்றி மேலும் தெரியவருவதாவது;

மது அருந்திவிட்டு வீடு நோக்கி சைக்கிளில் வந்துகொண்டிருந்த குடும்பஸ்தரை வழிமறித்த ஒருவர் இது திருட்டுப் போன சைக்கிள், தர மறுத்தால் வெட்டிவிடுவதாக எச்சரித்ததை அடுத்து சைக்கிளை கொடுத்துவிட்டு, குடும்பஸ்தர் வீட்டுக்குப்போனார்.

சம்பவத்தை கணவன் மூலம் அறிந்த மனைவி பொலிஸாரின் உதவியுடன் தேடுதலை மேற்கொண்ட வேளையில் கள்ளுத் தவறணை ஒன்றில் வைத்து சைக்கிள் திருடன் கைது செய்யப்பட்டதுடன் சைக்கிளும் மீட்கப்பட்டது. (க-23)

## திருமலை நகரில் அடிக்கடி தேடுதல்

(திருமலை)

திருமலை நகரில் இராணுவத்தினரின் பாதுகாப்பு பலபபடுத்தப்பட்டு திடீர் சுற்றிவளைப்புகள், தேடுதல் வேட்டைகள் அடிக்கடி இடம் பெறுவதாகவும் இதனால் மக்கள் மத்தியில் பீதி நிலவுவதாகவும் திருமலைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை,

திருமலை நகரில் 10 ஆம் குறிச்சி திருக்கடலூர் பகுதியில் பலத்ததேடுதல்வேட்டை இடம்பெற்றதாகவும் இதன் போது எவரும் கைதாகவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதேபோல் வடகரை வீதிகரைப்பிரதேசமும் பலத்த தேடுதலுக்கு உள்ளாக்கப்பட்டது.

இது இவ்வாறு இருக்க திருமலை இராணுவ இணைப்பதிகாரி திருமலைநகரில் உள்ள ஓட்டோ சாரதிகளை அழைத்து கூட்டம் ஒன்றை நடத்திய தாகவும் அக் கூட்டத்தில் 10ஆம் குறிச்சி மக்கள் எவ்வகையான பொருட்களையும் ஓட்டோவில் ஏற்ற வேண்டாம் என்றும் டைனமைற் வைத்து பிடிக்கப்படும் மீன்கள் ஏற்றக் கூடாதென்றும் தெரிவித்துள்ளார். இக் கூட்டத்தில் மூவின மக்களும் கலந்து கொண்டனர். (வ)

## இனப்பிரச்சினையைத்தீர்க்க மு. காங்கிரஸ் பாடுபடும்

(கொழும்பு)

முஸ்லிம்களின் உரிமையை வென்றெடுப்பதற்காகவும் இனப்பிரச்சினையை தீர்ப்பதற்காகவும் முஸ்லிம் காங்கிரஸ் அயராது பாடுபட்டு உழைக்கும் என முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை மருதமுனையில் இடம்பெற்ற மறைந்த முஸ்லிம் காங்கிரஸ் தலைவரான எம். எச். எம். அஷ்ரப் நினைவு மலர் வெளியீடு மற்றும் ஊடகவியலாளர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வில் பிரதமஅதிதியாக கலந்துகொண்டுஉரையாற்றும் போதே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; அமைச்சர் பதவியை அரசிடம் கேட்கவில்லை எனவும் பதவியாசைக்காக நான் முஸ்லிம் மக்களை விலைக்கு விற்கமாட்டேன் எனவும் தெரிவித்தார். (க-04)

## மலசல கூடம் அமைப்பு

பட்டினிக்கு எதிரான நிறுவனம்,கரவெட்டி கிழக்கு இடம்பெயர்ந்தோர் முகாமில், 25 அங்கத்தவர்களுக்கு ஒரு மலசல கூடம் என்ற ரீதியில் அமைத்து வருகின்றது. (உ-41)


பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் (வ/து)

பருத்தித்துறை

## கேள்வி அறிவித்தல்

கீழ்வரும் வேலைக்கான கேள்விகள் பரு. பல. நோ. கூ. சங்க பொது முகாமையாளரால் 2001ம் ஆண்டு ஐப்பசி மாதம் 1ம் திகதி திங்கட்கிழமை (1-10-2001) முற்பகல் 11.00 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும். பெறப்பட்ட கேள்விகள் உடனடியாகத் திறக்கப்படும்.

1. நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தில் இக்ராட் (ICTAD) கட்டிடங்கள் நிர்மாணிப்பதற்கு கீழே குறிப்பிடப்படும் தரவுகளையுடைய அல்லது அதற்கு மேல் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் மட்டும் கேள்விப் பத்திரங்கள் கோருவதற்கு தகுதியுடையோராவர்.
2. ஒப்பந்தப் பத்திரங்களை பெறுவதற்கு முன்னர் நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தினரால் வழங்கப்பட்டதும். இன்றைவரை செய்யப்பட்ட வேலைகளின் விபரங்கள் அடங்கியதுமான பதிவுப் புத்தகத்தை அலுவலகத்தில் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. தகுதி உடையோர் மட்டும் கீழ்காணும் அட்டவணை பிரகாரம் உரிய கட்டணங்களை பரு. பல, நோ. கூ. சங்க தலைமை அலுவலகத்தில் செலுத்தி பற்றுச் சீட்டை பெற்று கேள்விப் பத்திரங்களை 2001ம் ஆண்டு ஐப்பசி மாதம் 1ம் திகதி முற்பகல் 10.00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.

| வேலை விபரம் | பதிவு செய்யும் தரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு பணம் | மீளளிக்கப்படாத படிவக் கட்டணம் (பொ.சே.வ.உட்பட) |
|---|---|---|---|
| பரு. பல. நோ. கூ. சங்கத் தலைமைக் காரியாலயம், களஞ்சியம் கட்டுதல் | எம்-06 | 10,000/- | 500.00 |

4. கேள்வி கோருபவர் ஒருவருக்கு ஒரு தொகுதி ஆவணங்கள் மட்டும் விநியோகிக்கப்படும்.
5. கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சிக்கலாம். மேலதிக விபரங்களை பருத்தித்துறை பல. நோ. கூ. சங்கத் தலைமைக் காரியாலயத்தில் பொது முகாமையாளரிடம் வேலை நாட்களில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

பரு. பல. நோ. கூ. சங்கம் (வ/து)
தம்பசிட்டி வீதி,
பருத்தித்துறை.

பொதுமுகாமையாளர்
பரு. பல. நோ. கூ. சங்கம்
(கி/2606)

## இன்று ஒரு தகவல்

# கவிஞரா? பண்டிதரா?

என்ன சார்! கொஞ்ச நாளாக இந்தப்பக்கமே உங்களைப் பார்க்கமுடிகிறதில்லை? என்று ஒருவரைப் பார்த்துச் சொன்னேன். இப்போது நான் மிகவும் பிஸி சார்; கதை, கட்டுரை, கவிதை, நாடகமெல்லாம் நிறைய எழுதுகிறேன் என்றார் அவர். அப்படியென்றால் இப்போது எதற்கு சார் இந்தப் பக்கம் வந்தீர்களென்று கேட்டேன். என்னுடைய கவிதை நன்றாக இருக்கிறதென்று எல்லோரும் சொல்கிறார்கள். 'அதனால் என்பெயருக்கு முன்னால் போட்டுக்கொள்வதற்கு ஒரு பட்டம் வேண்டும்' என்றார்.

'என்னிடம் கைவசம் எதுவும் இல்லையே' என்றேன். 'அது எனக்கும் தெரியும்சார்! ஆனாலும் உங்களிடம் ஒரு யோசனை கேட்கலாமென்று வந்தேன். அதுதான் தாராளமாகச் சொல்வீர்களே' என்றார்; 'என்ன யோசனை?' என்றேன். 'என்னுடைய பெயருக்கு முன்னால் 'கவிஞர்' என்று போட்டுக்கொள்ளலாமா? அல்லது 'பண்டிதர்' என்று போட்டுக்கொள்ளலாமா? என்று கேட்டார். நீங்கள் எழுதிய சிலவற்றைப் படித்துப் பார்த்து விட்டுத்தான் இதற்குப்பதில் சொல்ல முடியும் என்றேன்.

'அதையும் கையோடு கொண்டு வந்திருக்கிறேன், இந்தாருங்கள் முதலில்இதைப் படியுங்கள்' என்று சொல்லி ஒரு காகிதத்தை நீட்டினார். அதைவாங்கிக் கையில் வைத்துக் கொண்டு, 'இதை நான் படிக்கிறதற்கு முன்னர் கவிஞர் என்றால் யார்? பண்டிதர் என்றால் யார் என்பதைப் புரிந்து கொள்வதற்கு ஒரு கதை சொல்கிறேன் கேளுங்கள்!' என்று ஆரம்பித்தேன். அவரும் மிகவும் அடக்கமாக எதிரில் உடகார்ந்து கேட்டுக்கொள்ள ஆரம்பித்தார்.

'வடமொழியில் பவபூதி என்று ஒரு மகாகவி இருந்தார். அவர் மிகப் பெரிய அறிவாளி; பக்திமான். அவருடைய அறிவையும் பக்தியையும்பார்த்துவிட்டு சரஸ்வதி தேவியே மிகவும் ஆச்சரியப் பட்டுப் போனார்களாம். அதுமட்டுமில்லை, அவர்களே ஒரு சிறுமியாக வந்து அவருக்குப் பணிவிடை செய்து கொண்டிருந்தார்களாம். அப்படி ஒருகதை உண்டு. அப்படியென்றால பார்த்துக் கொள்ளுங்களேன். ஒருநாள் இந்தப் பவபூதியை பார்க்கிறதற்காக இரண்டுபேர் வந்தார்கள். ஒருவர் காளிதாஸர் இன்னொருவர் தண்டியடிகள். இவர்களிருவரும் அங்கு வந்தநேரத்தில், பவபூதி பூஜையில் இருந்தார். வாசலில் அந்தச் சிறுமிமட்டும் நின்று கொண்டிருந்தாள். இவர்களைப் பார்த்தவுடன்; 'வாருங்கள்! கொஞ்சநேரம் இப்படி உட்காருங்கள! அவர் பூஜையில் இருக்கிறார் வந்து விடுவார்' என்று சொன்னாள்.

சரியென்று சொல்லி இரண்டுபேரும் அங்கே உட்கார்ந்தார்கள். தண்டியடிகள் அந்தச் சிறுமியைப் பார்த்து 'பூரணசந்திரன் போன்ற முகத்தையுடையவளே! கொஞ்சம் பாக்குத்தூள் கொண்டுவா! என்றார். (பூர்க சூர்ணமானிய தாம் பூர்ணசந்திர நிமானனே!) அடுத்ததாகக் காளிதாஸன் அந்தச் சிறுமியைப் பார்த்து 'காதளவு நீண்ட கண்களையுடைய பெண்ணே! பொன்னிறமான வெற்றிலையையும் கொண்டுவா' என்றார். (ஸ்வர்ண வர்ண பர்ணம் கர்ணாந்தாய லோசனே).

இதைக்கேட்டதும் அந்தச் சின்னப்பெண் சரி என்று சொல்லிவிட்டு உள்ளேபோய் வெற்றிலையையும் பாக்கையும் எடுத்துகொண்டு வந்தாள். வழியில் பவபூதி பூஜையை முடித்து விட்டு நின்று கொண்டிருந்தார் வெற்றிலை பாக்கோடுசிறுமி போய்க்கொண்டிருந்ததைப்பார்த்தார். யாருக்கம்மா வெற்றிலை பாக்கு எடுத்துக்கொண்டு போகிறாய்? என்று கேட்டார். அதற்கு அந்தச்சிறுமி. 'கவிஞராகிய காளிதாஸனுக்கும், பண்டிதராகிய தண்டியடிகளுக்கும் கொண்டுபோகிறேன்' என்றாள். (கவியே காளிதாசய பண்டிதாய தண்டினே) அதுசரியம்மா! காளிதாஸனைக் கவிஞர் என்று சொல்கிறாயே, தண்டியை பண்டிதர் என்று சொல்கிறாயே! ஏன்? என்று கேட்டார் பவபூதி. இப்போது அந்தச் சிறுமி அதற்கு விளக்கம் கொடுக்கிறாள்;

'காளிதாஸர் என்னைக் காதளவு நீண்டகண்களை உடையவளே' என்று வர்ணித்தார். உனக்கு நீண்ட கண்கள் இருக்கிறது. அதனால் பொனனிறமான வெற்றிலையைத்தேடி எடுத்துக் கொண்டுவா' என்று சொன்னார். பயனற்ற வர்ணனை ஏதும் இல்லாமல் சொற்களைக் காரணகாரியத்துக்கு ஏற்றமாதிரிப் பயன்படுத்துகிறவன்தான் கவிஞன். ஆனால் காரண காரியததை நோக்காமல் வெறும் வர்ணனையைக் கையாள்பவன் பண்டிதன்;

'தண்டி பாக்குத்தூள் கேட்டார். என்னைப் பூரண சந்திரன் போன்ற முகத்தை உடையவளே' என்று வர்ணித்தார். இந்தவர்ணனைக்கும் பாக்குத்தூள் கொண்டுவருவதற்கும் ஒரு தொடர்பும் இல்லை; இதுவெறும் சொல் அலங்காரம. அதனாலேதான் காளிதாசனைக் கவிஞன் என்றும், தண்டியைப்பண்டிதன் என்றும் சொன்னேன் என்றாள அச்சிறுமி. இக்கதையை என் எதிரில்உட்கார்ந்திருக்கிறவரிடம் சொல்லிவிட்டு, இந்த அடிப்படையிற்தான் நீங்கள் கவிஞரா, பணடிதரா என்பதை முடிவுசெய்யப் போகிறேன் என்பதையும் சொல்லி அவருடைய படைப்பைப் படித்துப் பார்த்தேன்;

அவர்கொடுத்த முதல் காகிதத்தைப் படித்துப் பார்த்துவிட்டு, இந்தக்கட்டுரை மிகவும் நன்றாகத்தான் இருக்கிறதென்று ஆரம்பித்தேன். அதற்குள் அவா அவசரமாகக் குறுக்கிட்டு 'சார்! அது கட்டுரை இல்லை கவிதை' என்றார்.

**தென்கச்சிகோ, சுவாமிநாதன்**

# சீருடைத் தையல் கூலி 20 வீதத்தால் உயர்வு

அரச ஊழியர்களுக்கு வழங்கப்படும் சீருடைத் தையல் கூலியை 20 சத வீதத்தால் அதிகரிக்க நிதியமைச்சு அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இந்த அதிகரிப்புத் தொடர்பாக விரைவில் சகல திணைக்களங்களுக்கும் சுற்றறிக்கை அனுப்பிவைக்கப்படவுள்ளது;

1994 ஆம் ஆண்டு அமுல் படுத்தப்பட்ட சீருடைத் தையல் கூலியே இற்றைவரை நடைமுறையில் இருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ)

# உடன் படிக்கையை மீறிசெயற்படின் எதிர்க்கட்சியுடன் ஒத்துழைப்போம்

## அரசுக்கு ஜே. வி. பி. எச்சரிக்கை

(கொழும்பு)

அரசியலமைப்பின் 17 வது திருத்தம் தொடர்பாக சர்வஜன வாக்கெடுப்பை நடத்துவதற்கு நீதிமன்றம் மூலம் அழுத்தம் பிரயோகிக்கும் சூழ்ச்சியில் அரசாங்கம் இறங்கியுள்ளதாக ஜே வி.பியின் பாராளுமன்ற உறுப்பினர் நந்தன குணதிலக குற்றம் சுமத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், அரசாங்கம் இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபட்டு அரசு-ஜே.வி.பிபுரிந்துணர்வு உடன்படிக்கை முறிவடையுமானால் அதற்கான பொறுப்பை அரசாங்கமே ஏற்க வேண்டும்.

அரசியலமைப்பின் 17வது திருத்தம் தொடர்பில் சில விடயங்கள் மக்களுக்கு நன்மையளிக்கக் கூடியவை, பல விடயங்கள் மக்களுக்கு பாதகமானவை எனவே மக்களுக்கு நன்மையளிக்கக் கூடிய திருத்தச் சட்டம் கொண்டு வரப்படுவதற்கு நாம் எதிர்ப்புத் தெரிவிக்கப் போவதில்லை.

ஆனால் அரசும் ஐக்கிய தேசியக் கட்சியும் கயிறுழுப்பில் ஈடுபட்டால், எதிர்க்கட்சிகள் இணைந்து, மேற்கொண்ட திருத்தச் சட்டமூலத்தை எதிர்வரும் 24ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்போம் என அவர் மேலும் தெரிவித்தார்.

(உ-5)

## வருடாந்த மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம்வண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலய மஹோற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

26 ஆம் திகதி காலை 9. 30 மணிக்கு தேர்த்திருவிழாவும் 27 ஆம் திகதி காலை 10. 00 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும் ஏனைய உற்சவங்கள் காலை 9. 00 மணிமுதல் 12 மணிவரையும் மாலை 4 30 முதல் 6; 30 மணிவரையும் நடைபெறும்.

(செ-106)

## படகுச்சேவை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் குடாநாட்டின் வவசாய விளை பொருட்களுக்கு சந்தை வாய்ப்பைப் பெருககும் வகையில் புங்குடுதீவுக்கும், தலை மன்னாருக்கும் இடையில் படகுச்சேவை நடத்துவது பற்றி ஆலோசிக்கப்பட்டு வருகிறது;

புங்குடுதீவுக்கும் தலை மன்னாருக்குமிடையிலான படகுப்போக்குவரத்து சேவை இடம் பெறுமாயின் உள்ளூர் விவசாய விளை பொருட்களுக்கான சந்தை வாய்பபு பெருகுவதுடன் மன்னார் மற்றும் யாழ்ப்பாணப் பிரதேசங்களின் அபிவிருத்திப் பணிகள் துரிதமடையும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது;

(உ)

## விழிப்புணர்வு கருத்தரங்கு

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவில், வடக்கு-கிழக்கு மாகாண திணைக்களத்தின் அனுசரணையுடன் கரம்பொன் கிழக்கு மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினால் அண்மையில் விழிப்புணர்வுக் கருத்தரங்கொன்று நடத்தப்பட்டது.

''சுற்றாடலையும் சூழலையும் பாதுகாப்போம்'' என்னும் கருப்பொருளில் இக்கருத்தரங்கு அமைந்திருந்தது.

(செ-75)

## மோட்டார் சைக்கிள் திருட்டு

(யாழ்ப்பாணம)

புதிய மோட்டார் சைக்கிள் ஒன்று அண்மையில் யாழ். நகரை அண்டிய பகுதியில் திருடப்பட்டுள்ளது.

அரியாலையைச் சேர்ந்த மதியோகநாதன் என்பவரின் மோட்டார் சைக்கிளே களவாடப்பட்டுள்ளது.

(க-106)

## பொருட்கள் ஏலத்தில் விற்பனை

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்திய சாலை வெளிநோயாளர்மருந்தகத்தில் நாளைபுதன்கிழமை காலை 11 மணிக்கு வெற்றுப் போத்தல்கள், பிளாஸ்ரிக் டப்பாக்கள் மற்றும் இதர பொருட்கள் ஏலத்தில் விற்கப் படவுள்ளன. (க104-106)

# நிலத்தின் கீழ்சட்ட விரோத மதுபானஉற்பத்தி நிலையம்

(கொழும்பு)

நிலத்தின்கீழ்நவீனதொழில் நுட்ப வசதிகளுடன் கூடிய மதுபான உற்பத்தி நிலையம் ஒன்றினை குருநாகல் வாரியப்புல நகரில் விசேட குற்றத்தடுப்புப் பிரிவினர் கண்டு பிடித்துள்ளனர்.

தொலைக்காட்சி அன்ரனா வயரில் மேலதிக வயர்கள் இணைக்கப்பட்டுள்ளதைக் கண்டு சந்தேகம் கொண்ட பொலிஸார் சோதனையிட்டதன் பேரிலேயே இச்சட்ட விரோத மதுபான உற்பத்தி நிலையத்தைக் கண்டுபிடித்துள்ளனர்;

இங்கு உற்பத்தி செய்யப்படும அதிகச் செறிவுடைய மதுசாரம் அரச அங்கீகாரம் பெற்ற மதுபான விற்பனை நிலையங்களுக்கும் விநியோகிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்; (செ)

## திருட்டுச் சம்பவங்கள்

(யாழ்ப்பாணம்)

கச்சேரி நல்லூர் வீதியில் உள்ள மூத்த விநாயகர் ஆலயத்திற்கு சமீபமாக உள்ள கடையுடன் இணைந்த வீட்டினுள் புகுந்த திருடர்கள் றேடியோ, சைக்கிள மற்றும் ரூபா ஐயாயிரம் ரொக்கப் பணம் என்பவற்றை திருடிச் சென்றுள்ளனர்.

இப்பகுதியில் இதுபோன்ற சம்பவங்கள் அடிககடி இடம் பெறுவதனால் மக்கள் பெரிதும் விசனம் அடைந்துள்ளனர்; (க-106)

# விமானப்படை அதிகாரி பிணையில் விடுதலை

(கொழுமபு)

கட்டுநாயக்கா விமானப் படைத்தளம் மீதான தாக்குதலின் பின்னணியில், சந்தேகத்தின் பேரில் கடந்த வியாழனன்று கைது செய்யப்பட்ட விமானப்படை அதிகாரி பிணையில் விடுதலை செய்யப் பட்டுள்ளார்.

குற்றத் தடுப்புப் புலனாய்வுத் துறையினரால் கைது செய்யப்பட்ட ஆனந்த என்னும் விமானப்படை அதிகாரி வெள்ளிக்கிழமை நீர் கொழுமபு பதில நீதிவான் முன்னிலையில பிணையில் விடுவிக்கப்படடார்.

இதேவேளை, இலங்கை குற்றத்தடுப்புப் புலனாய்வுக் குழு கட்டுநாயக்கா விமானப் படைத்தளம் மீதான தாக்குதல் பற்றிய தமது அறிக்கையினை ஜனாதிபதி சந்திரிக்காவிடமும, இலங்கை விமானப் படைத்தளபதியிடமும் அறிக்கையைச் சமாபபிததுள்ளது; (உ)

# குடாநாடு முழுமையும் ரோந்துப் பணிகள் தீவிரம்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் கடந்த சில தினங்களாக படையினரின் கண்காணிப்பு மற்றும் ரோந்துப் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதனை அவதானிக்க முடிகின்றது.

இந்திய அரசிடம்5 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து பன்னிரு தினங்கள் உண்ணாவிரதம் இருந்து உயிர் நீத்த தியாகி திலீபனின் 14 ஆவது ஆண்டு நினைவு நிகழ்வுகள் ஆரம்பிக்கப்பட்டதையடுத்தே படையினர் குடா நாட்டின் பாதுகாப்பைப் பலப்படுத்தியிருப்பதாக அறியமுடிகிறது.

இதேவேளை, திலீபனின் நினைவு தினத்தையொட்டி யாழ். குடாநாட்டைக் கைப்பற்ற விடுதலைப் புலிகள் திட்டமிட்டிருப்பதாக புலனாய்வுப் பிரிவுகள் அரசுக்கு எச்சரிக்கை விடுத்திருப்பதும் குறிப்பிடத்தக்கது. (உ)

## சிந்தனைக்கு விருந்து

### நல்லவரை நாடுக

சுட்டமண்ணோ டொட்டுமோ பச்சைமண்?
பட்டமரம்
நட்டுப்பின் நல்லதளிர் நல்குமோ? — கெட்டவரைக்
கூடுவிரேல் உம்வாழ்வும் கூடா தழிந்துபோம்
நாடுவீர் நல்லவரை நன்கு

“பழையவன்”

## கொரியப் பேச்சுக்கள் ஆரம்பம்

(ப்யொங்யாங்)

வட கொரியா தென்கொரியாவுக்கிடையிலான பேச்சுவார்த்தை கடந்த ஞாயிறு இருநாட்டு அமைச்சர்கள் மட்டத்தில் ஆரம்பமாகியுள்ளது.

கடந்த ஆறு மாத கால இடைவெளிகளுக்குப் பின்னர் இவ்விரண்டு நாடுகளுக்கும் இடையே இப் பேச்சுவார்த்தை ஆரம்பமாகியுள்ளது.

இப்பேச்சுவார்த்தை மூலம் பிளவுபட்ட இரண்டு கொரியாக்களுக்கான சமாதானத்தைக் கட்டிஎழுப்பும்வகையில் ஒரு உடன்பாடு உருவாகும் என நம்பப்படுகிறது.

மேலும் இப்பேச்சுவார்த்தை இன்னும் ஓரிரு நாட்கள் நீடிக்கும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

(க-07)

# அழிவுதரும் நடவடிக்கைகளை நிறுத்தி ஆக்கபூர்வ வழிகளைக் கையாள வேண்டும்

## அமெரிக்காவுக்கு கடாபி ஆலோசனை

(ட்ரிபோலி)

ஆப்கானிஸ்தான் மீது தாக்குதல் நடத்தினால் சோவியத் ஒன்றியத்திற்கு முன்னர் ஏற்பட்ட கதியே அமெரிக்காவுக்கும் ஏற்படும் என்று லிபியத் தலைவர் முகமட் கடாபி எச்சரித்துள்ளார்.

வாஷிங்டன் நியூயோர்க் நகரங்கள் மீதுநடத்தப்பட்ட விமானத் தாக்குதலினால் பெரும் பாதிப்படைந்த அமெரிக்கா அதற்குப் பதிலடியாக ஆப்கானிஸ்தான் மீது தாக்குதல் நடத்தினால்அங்கு ஏற்பட்ட அழிவுகள் சீர்பட்டிடுமா எனவும் பதில் தாக்குதல் நடத்தினால் தீவிரவாதிகளை இனங்காண முடியுமா என்றும், லிபியாவில் சொலோப் நகரில் இடம்பெற்ற கூட்டம்ஒன்றில் உரையாற்றிய போது கடாபி வினா எழுப்பினார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில், 1979 ஆம் ஆண்டு தொடக்கம் 1988 ஆம் ஆண்டு வரை ஆப்கானிஸ்தானின் மலைப் பகுதியில் 20ஆயிரம் ரஷ்யர்கள் உயிரிழந்தனர் என்பதை ஞாபகமூட்டியதுடன்,

இது விடயத்தில் அமெரிக்கா தனது அரசியல் முதிர்ச்சி அனுபவத்தை உரிய வகையில் பயன்படுத்தவேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

ஆப்கானிஸ்தானில் மறைந்திருக்கும் பின்லேடன் மற்றும் அவரது குழுவினர் மீது தாக்குதல் தொடுக்க அமெரிக்கா தயாராகி வருகின்றது.

இந்நடவடிக்கையால் அவர்கள் மாத்திரமன்றி சுமார்20 ஆயிரத்திற்கும் அதிகமான அப்பாவிப் பொதுமக்களும் பலியாகும் நிலை வரலாம்.

எனவே, அமெரிக்கா தனது தற்போதைய வீண்முயற்சியைக் கைவிட்டு நிதானமான முறையில்இப்பிரச்சினையை அணுகி, குற்றத்துக்கு உரியவரை மாத்திரமே தண்டிக்கத்தக்க நடவடிக்கைகளில் இறங்க வேண்டும் என்றும் ஆலோசனை கூறும் ரீதியில் தனது கருத்தை வெளியிட்டார்.

(உ-7)

அமெரிக்கா மீது கைவைத்தோர்

## எந்தப் புற்றுக்குள் இருந்தாலும் கண்டுபிடிக்கப்படுவர்

(வாஷிங்டன்)

அமெரிக்கா மீது தாக்குதல் நடத்தியதாகக் கருதப்படும் தீவிரவாதி பின்லேடன் தான் தலைமறைவாக வாழலாம் என நினைத்துக் கொண்டால் அது அவரது பலவீனம் என்று அமெரிக்க அதிபர் புஷ் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; அமெரிக்கா மீது கைவைத்தவர் எந்தப் புற்றுக்குள் இருந்தாலும் அவரைக் கண்டுபிடித்து சட்ட நடவடிக்கை எடுப்பது அமெரிக்காவின் ஒரு சிறிய விளையாட்டு எனத் தெரிவித்துள்ளார்.

தேசிய பாதுகாப்பு ஆலோசகர்களை சந்திக்கும் முன்னர் ஊடகவியலாளர் மத்தியில் பேசியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அமெரிக்கா மீது தாக்குதல் நடத்தியது பின்லேடன் தான் என்று உறுதியுடன் கூறிய அவர், அமெரிக்க அரசிடமிருந்தும் கூட்டுப்படையினரிடமிருந்தும் ஒரு போதும் தீவிரவாதிகள் தப்ப முடியாது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

(க 7)

## அமெரிக்காவுக்கு உதவ கனடா நிபந்தனை

(ஒட்டாவா)

அமெரிக்கா மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு பதில் தாக்குதல் நடத்துவதற்கு தோளோடு தோள் நின்று உதவத் தயார் என கனடா மீண்டும் வலியுறுத்திக் கூறியுள்ளது.

இருந்த போதும் அமெரிக்கா மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு முற்று முழுதாக காரணமானவர்களை இனங்கண்டு அவர்கள் மீது பதிலடி நடத்துவது உறுதி செய்யப்பட வேண்டுமென்று கனடாவின் பிரதமர் ஜோன் கிரேஷியின் பிரதம பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அமெரிக்கா மீது நடத்தப்பட்ட விமானத் தாக்குதலின் பின் அமெரிக்காவின் தலைமையகங்கள் பலவும் கனடாவில் இயங்கியதுடன் அமெரிக்காவுக்கு சகல உதவிகளும் வழங்கத் தயார் என கனடாப் பிரதமர் ஜோன் கிரேஷியஸ் ஜனாதிபதி புஷ்ஷிற்கு நேரில் சென்று கூறியதாகவும் செய்திகள் வெளியானமை குறிப்பிடத்தக்கது.

(உ-7)

## தமிழகஉள்ளூராட்சி தேர்தல் பெயர்ப் பட்டியல் வெளியீடு

(சென்னை)

தமிழக உள்ளூராட்சித் தேர்தலில் அ.இ.அ.தி.மு.க. சார்பில் மாநகர, நகர ஆட்சித் தலைவர்களாக நிறுத்தப்பட இருப்போரின் பெயர்ப் பட்டியலைமுதல்வர் ஜெயலலிதா வெளியிட்டுள்ளார்.

சென்னைமாநகர சபைக்குத் தலைவராக அ.இ அ.தி.மு.க. சார்பில் பாலகங்காவும், கோவை மாநகர சபைக்கு தலைவராக தி. மலரவனையும், பல்லாவர நகரசபைக்கு வி.தனசிங்கும் விழுப்புரம் நகரசபைக்கு ஏ. பீர்முகமதுவும் ஈரோட்டிற்கு ஆர். மனோகரனும், பட்டுக்கோட்டைக்கு ஆ. கார்த்திகேயனும், நாகபட்டினத்திற்கு எம. தமிழரசியும், திருவாவடுதுறைக்கு எஸ். விஜயகுமாரியும், புதுக் கோட்டைக்கு எம். இராஜேந்திரனும், திருமங்களத்திற்கு ஜெயராமனும் தேர்தலில் நிறுத்தப்படவுள்ளார்கள்என்றுஜெயலலிதா தெரிவித்தார்.

இதேவேளை, தனது கூட்டணியிலுள்ளோர் தனித்து கட்சியின் சார்பில் போட்டியிட முனைந்திருந்தால் அதனை விலக்கிக் கொள்ளும்படி அவர் கேட்டுக் கொண்டார்.

(க)

## அமெ.மீதான தாக்குதலின் உண்மைச் சூத்திரதாரியை கண்டுபிடிக்க பிரிட்டிஷ் உதவும்

## றொனி பிளேயர் அறிவிப்பு

(லண்டன்)

அமெரிக்காவின்நியூயோர்க் நகரிலும், வாஷிங்டனிலும் இடம்பெற்ற பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு பதிலடி கொடுக்கும் அமெரிக்காவின் நடவடிக்கைக்கு பிரிட்டிஷ் தனது முழு ஆதரவையும் வழங்குமென்று பிரிட்டிஷ் பிரதமர்றொனிபிளேயர்தெரிவித்துள்ளார்.

சர்வதேச பயங்கரவாதத்தின் சூத்திரதாரிகளைக் கண்டுபிடிக்கும் அமெரிக்காவின் நடவடிக்கைகளுக்கு ஆதரவுவழங்க முன்வந்திருககும்பிரிட்டிஷ் அரசு இத்தகைய பயங்கரவாத நடவடிக்கையின் பின்னணியில் யார் இருந்து செயற்பட்டார்கள் அல்லது எந்த அமைப்புசெயற்பட்டது என்று முழுமையாக அறிந்தபின்னரே பதில்நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அமெரிக்காவிடம் வலியுறுத்திக்கூறியுள்ளார்.

(வ)

உலக தரிசனம்

## விடுதலைச் சிறுத்தைகள் விலகத் தேவையில்லை

(சென்னை)

திராவிட முன்னேற்றக் கழகத்தில் மீண்டும் பாட்டாளி மக்கள் கட்சி சேர்ந்தாலும் தமது அணியில் இருந்து விடுதலைச் சிறுத்தைகள் இயக்கம் விலகத் தேவையில்லையென்று கலைஞர் மு. கருணாநிதி தெரிவித்துள்ளார்.

பாட்டாளிமக்கள் கட்சித் தலைவர் டாக்டர் இராமதாஸ் தி.மு.க. வுடன் பேச்சுவார்த்தை நடத்திய பொழுது,

திருமாவளவன் தலைமையிலான விடுதலைச் சிறுத்தைகள் உள்ளூராட்சித் தேர்தலிலோ பொதுத்தேர்தல்களிலோ தேசிய கூட்டணியிலிருந்து விலகத்தேவையில்லையென்றும், முன்புபோல் எல்லாக் கட்சிகளும் சேர்ந்து செயற்பட வேண்டும்என்றும் அவர் கேட்டுக்கொண்டதாக கலைஞர் மு. கருணாநிதி குறிப்பிட்டார்.

இதற்கிடையில் தமிழ்மாநில காங்கிரஸிலிருந்து விலகிய ப. சிதம்பரம் தலைமையிலான தமிழ் மாநிலகாங்கிரஸ் பேரவை தி.மு.க. வுடன் இணையமுன்வந்துள்ளது.

(து)

## அமெரிக்க அதிபர்புஷ்ஷின் போர் நடவடிக்கைக்கு ரஷ்யா முழு ஆதரவு

(மாஸ்கோ)

அமெரிக்க நகர்களைத்தாக்கிய பயங்கரவாதிகளுக்கு எதிராகபுஷ் எடுக்கும் போர் நடவடிக்கைகளுக்கு ரஷ்யாஉதவ முன்வந்துளளது. நேற்று முன்தினம் ரஷ்யாவிடுத்த அறிக்கையொன்றில் மிலேச்சத்தனமாக உலகவர்த்தகமையமும் மற்றும் கட்டடங்களும் தாக்கபபட்டதையும் பல்லாயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டதையும் கண்டித்ததுடன், பயங்கர வாதத்திற்கு எதிராக அமெரிக்கா எடுக்கும் எந்த முயற்சியிலும் துணை நிற்கப்போவதாகவும் தெரிவித்துள்ளது.

இதனையடுத்து அண்டை நாடான கஜகஸ்தானும்அமெரிக்காவிற்கு உதவப்போவதாக அறிவித்துள்ளது.

(து)

## படைகளை வழிநடத்தும் உரிமை அமெ. அதிபருக்கே

(வாஷிங்டன்)

அமெரிக்க அதிபர் ஜோர்ச் டபிள்யூ புஷ்ஷிற்குசகல படைகளையும் வழி நடத்துவதற்குரிய அதிகாரங்கள் வழங்கப்பட்டிருக்கிறது.

அமெரிக்காவின் கீழ்ச்சபை ஒற்றுமை வெளிப்பாடாக பயங்கரவாதிகளுக்கு பதிலடி கொடுக்கத் தேவையான உரிய படைகள் அனைத்தையும் பாவிக்கும் அதிகாரத்தைஅதிபர் புஷ்ஷிற்கு வழங்கியுள்ளது.

இதேவேளை கடந்த சனிக்கிழமைஅமெரிக்காவின் மேற்சபை தீவிரவாதிகளைத் தாக்கும் போருக்குத் தேவையான நிதிகளை எடுக்கும் அதிகாரத்தையும் போரை முன்னெடுக்கும் உரிமையையும் அதிபர் புஷ்ஷிற்கு வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது

(து)

## பயணிகள் விமானங்களுக்கு பாதுகாப்பு ஏற்பாடு

## பிரிட்டிஷ் பிரமுகர் தெரிவிப்பு

(லண்டன்)

பயணிகள் விமானங்களில் ஆயுதம் தாங்கிய பாதுகாப்பு உத்தியோகத்தர்களை நியமிப்பதுபற்றியும் பயணிகளுக்கென தனியறை அமைப்பது பற்றியும் பிரிட்டன் ஆலோசித்து வருவதாக பிரிட்டன் போக்குவரத்து செயலாளர் ஸ்ரீபன் பயஸ் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் கடந்த செவ்வாயன்று அமெரிக்க நகரங்கள் மீது நடத்தப்பட்ட விமானத்தற்கொலை குண்டுத் தாக்குதலையடுத்து விமானங்களை பாதுகாக்கும் முகமாக ஐரோப்பிய போக்குவரத்து அமைச்சர்கள் நேற்று முன்தினமிரவு கலந்துரையாடியதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

(க-04)

பிலிப்பைன்ஸில் மூடிய

## அமெரிக்க இராணுவத் தளங்களை மீண்டும் உபயோகிக்க முஸ்தீபு

(மணிலா)

அமெரிக்க நகரங்களில் நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கும் முகமாகவும் சம்பந்தப்பட்ட தீவிரவாதிகளை இனம்கண்டு அழிக்கும் முகமாகவும் மேற்கொள்ளவுள்ள தாக்குதலுக்கு பிலிப்பைன்ஸில் அமைந்துள்ள தனது இராணுவத்தளங்களை அமெரிக்கா மீண்டும் பயன்படுத்தலாம் என்று பிலிப்பைன்ஸ் பாதுகாப்புத் தளபதி அஞ்சலோ டயஸ் தெரிவித்துள்ளார்.

பிலிப்பைன்ஸில் தனது உபயோகத்தில் இருந்த கிளாக் வான்தளம் மற்றும் சோமிக் கடல்தளம் ஆகியவற்றை 1990 களின் முற்பகுதியில் அமெரிக்கா மூடியது.

அவற்றை தனது யுத்தங்களுக்கு அமெரிக்கா மீண்டும் பயன்படுத்தும் சாத்தியம் இருப்பதாக தளபதி அஞ்சலோ டயஸ் தெரிவித்துள்ளார்.

(உ-7)

நாடொறும் நாடி முறை
செய்யா மன்னவன்
நாடொறும் நாடுகெடும்
-குறள்

# வலம்புரி

## நிவாரண உயர்வு தேவை

நாட்டின் வரவு செலவுத் திட்டத்தில், பெரும்பகுதி யுத்த செலவுக்காக ஒதுக்கப்படும் நிகழ்வு கடந்த பலவருடங்களாக நடந்து கொண்டிருக்கிறது. இதனால் அபிவிருத்தி நோக்கிய செயற்திட்டங்கள் ஸ்தம்பிதமடைய முதலீடு, உற்பத்தி, வேலைவாய்ப்பு எல்லாம் வீழ்ச்சி நிலை கண்டுள்ளது.

இதன்விளைவாகஇன்று பொதுவிலைமட்டத்தின் அதிகரிப்பு நாளொருவண்ணமாக ஏறிச்செல்கிறது. இதற்குமேலாக, புதிய புதிய வரிகளின் அறிமுகம் உற்பத்திகளை குறைப்பதுடன், விலையில் பன்மடங்கு அதிகரிப்பையும் ஏற்படுத்தி விடுகிறது.

இலங்கையில் மூடப்பட்ட பொருளாதாரக் கொள்கை கடைப்பிடிக்கப்பட்ட காலததில் விவசாயிகள் உற்பத்தியில் முனைப்புடன் ஈடுபட்டதும் அதனால் நாட்டின் தேசியஉற்பத்தியில் ஓர் அதிகரிப்புப் போக்குக் காணப்பட்டதும் கனவுக் கோலம்போல் காட்சி அளிக்கிறது.

1978 களில் ஜே.ஆர். அரசு நாட்டிற்கொவ்வாத திறந்த பொருளாதாரக் கொள்கையை அறிமுகப்படுத்தியதிலிருந்து, இறக்குமதிப் பொருட்களின் தாராள வருகை உள்நாட்டு உற்பத்தியாளர்களை நிலைகுலையச் செய்தது.

குறிப்பாக விவசாய உற்பத்தியாளர் வெளிநாட்டு இறக்குமதிப் பொருட்களுடன் போட்டி போடும் வலுவற்று நிலபுலங்களை விற்று விவசாயத் தொழிலில்இருந்து வெளிநடப்புச் செய்தனர்.

இதனால் உள்நாட்டு வளங்கள் முடங்கிப் போயின இந்நிலையை மேலும் வலுப்படுத்துவதாக இனப்போர் தலைதூக்கியது. இடப்பெயர்வு, சொத்தழிவு போன்ற பல காரணங்களினால் மக்கள் அரசிடம் கையேந்தும் நிலைக்கு ஆளாகினர்.

நிவாரணக் கொடுப்பனவு ஏதோ அரையும் குறையுமாக வயிற்றை நிரப்பியது. ஆனால் இப்போதுள்ள விலை மட்ட அதிகரிப்பு நிவாரணக் கொடுப்பனவை குறைத்துவிட்டது. இந் நிலையில் வடபுலத்துமக்கள் பெரும் பாதிப்படைவர் என்பது திண்ணம்.

எனவே இதுவிடயத்தில் புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா அவர்கள் தலையிட்டு நிவாரணக் கொடுப்பனவை அதிகரிக்க வழி செய்வது மிகமிக அவசிய மாகும்.

# உணவுசக்தியைக் கிரகிக்கும் மண்ணீரலில் ஏற்படும் சோர்வு நீரிழிவுக்கு வழிகோலும்

## மருத்துவ விளக்கம்

தொகுப்பாளர்

**ஐ. பி. இளையபெருமாள்**

(சென்றவாரத் தொடர்ச்சி)

### உணவு ஜீரணமாகும் முறை

உணவானது வாயில்உமிழ் நீருடன் கலக்கும் போதே வயிற்றுக்குள் வரும் உணவைச் செரிக்கக் கூடிய சக்தி கிரகிக்கப்படுகிறது. அவ்வாறே மண்ணீரல், நுரையீரல், இருதயம் ஆகிய மற்ற மூன்று உறுப்புகளும் உயிர்ச் சக்தியை உணவிலிருந்து கிரகித்து விடுகின்றன. மண்ணீரலின் உதவியின்றி வயிறு (இரைப்பை) இயங்க இயலாது; மண்ணீரல் இயங்க வேண்டுமெனில் அதற்குமிதமான வெப்பம் தேவை நீர் சக்தியானது அதனுள் தேங்கக் கூடாது: உணவுவாயிலிருக்கும்போது கிரகிக்கப்பட்ட உயிர்ச்சக்தியைக் கொண்டே வயிற்றுக்குச் செரிமானத்துக்குத் தேவையான இயக்கத்தையும், இரசாயன சுரப்பு நீரின் தன்மையினையும்நிர்ணயிக்கிறது. மண்ணீரல்வெளிப்பாடே வயிற்றின் இயக்கமாகும். வயிற்றில் உணவு ஜீரணிக்க ஆரம்பித்ததும், அதற்குத் தேவையான வெப்பம், உணவுப் பொருட்கள் வயிற்றின் இரசாயனச் சுரப்பு நீர்களுடன் முடிவுறக் கலக்கும் வரையில் (குறைந்தது 20 நிமிடங்கள் வயிற்றில் உட்கொள்ளப்பட்ட உணவின் தாக்கம் நீங்கி வயிறு சுகமாக உணரப்படும் வரையில்) தண்ணீர் குடித்தலைத் தள்ளிப் போடுவது மிக மிக அவசியம். காரணம், உணவுடன் சேர்ந்து தண்ணீரை அருந்தும் போது வயிற்றின் வெபபசக்தி இயங்கும் திறன் குறைகிறது: இதைச் சரிக்கட்ட மண்ணீரலானது தனது இயக்க சக்தியிலிருந்து ஒரு பகுதியை வயிற்றின் ஜீரண சக்தியைத் தக்க வைப்பதற்காகச் செலவிடுகிறது:

இந்த நிலைதான் மண்ணீரலுக்கு மிகவும்பாதகமானசூழ் நிலையாகும்: முறைப்படி உணவு வயிற்றுக்குள் வந்ததும், வயிற்றிலிருந்து சக்தியானது உணவிலிருந்து பிரிக்கப்பட்டு மண்ணீரலுக்குச் செல்ல வேண்டும்; ஆனால் உணவு உட்கொள்ளும்போது நீர் அருந்தும் போது நேர் மாறாக மண்ணீரலிலிருந்து வயிற்றுக்கு சக்தியானதுவிரயமாகிறது. இப்படி ஒருநிலை மண்ணீரலுக்கு ஏற்படும் போது, வயிற்றை முறையாக இயக்கும் திறனைமண்ணீரல் இழக்கிறது. வயிற்றின் இயக்கம் சீர்கெடுகிறது. வயிற்றின் சுரப்பு நீர்கள் அவை சுரக்கும் தன்மையிலும், அளவிலும் சீர் குலைகின்றது. உணவானது சுரப்புநீர்களுடன் முறையாகக் கலக்காமல் தண்ணீருடனும் கலந்து ஜீரணம் முரணபாடாக நடைபெற ஆரம்பிக்கிறது.

### வயிறு இயங்கும் நேரம்

ஒருநாளில் 24 மணிநேரத்தில் முழுத்திறனுடன் வயிறு இயங்கும் நேரம் காலை 7.00 மணி முதல் 9 00 மணிவரையாகும். வயிற்றின் இயக்கத்தைத் தொடர்ந்து மண்ணீரல் காலை 9.00 மணியிலிருந்து முற்பகல் 11.00 மணி வரையிலும் முழு மூச்சுடன் இயங்குகிறது. அதாவதுவயிற்றில் ஜீரணம் முடிய மண்ணீரலானது உணவின் உயிர்ச் சக்தியை (வெப்ப சக்தியை) கிரகிக்கஇயங்குகிறது, உணவுடன் நீரைச்சேர்த்துப் பருகும் பழக்கத்தைக் கொண்டிருப்போமானால் இந்த வெப்ப சக்தியுடன் நீர்ச்சக்தியும் கலந்து மண்ணீரலை அடைகிறது. மேலும் குளிர்ந்த நீர், ஐஸ்வாட்டர் போன்றவற்றைப் பருகுவோமானால் வெப்ப சக்தியானது இன்னும் அதிகமாக வயிற்றில்குளிர்விக்கப்படுகிறது. இறுதியாக இவை நீர்ச்சக்தியாக மண்ணீரலுக்குள்கிரகிக்கப்படுகிறது.

### மண்ணீரல் நுரையீரல்

மண்ணீரல் வயிற்றின்உணவுச் சக்திலிருந்து கிரகிக்கும் உயிர்ச்சக்தியை நுரையீரலுக்குள் செலுத்துகிறது. அதாவது மண்ணீரல் காற்றலைகளாக உள்ள இயக்க சக்தியை (வெப்பசக்தியை) நுரையீரல்களுக்குச் செலுத்தி அங்கும் பிராணவாயுவுடன் சங்கமிக்க வைககிறது. அதுமட்டுமல்ல, நுரையீரலும் தன்பங்குக்கு மண்ணீரலிலுள்ள உயிர்ச்சக்தியை வேகமாக உறிஞ்சுகிறது.

### சளி, ஜலதோஷம்

உணவின் போது, தண்ணீரைக் குடிக்கும் பழக்கத்தினால், மண்ணீரலின் வெப்ப சக்தி குளிர்ந்து. நீர்ச்சக்தி தேக்கம கொள்ளும் போத, நுரையீரலானது. மண்ணீரலிலிருந்து காற்றலைகளாக உள்ளவெப்பசக்தியை(இயக்க சக்தியை) கிரகிப்பதற்குப் பதிலாக ஈரப்பதம் [illegible]லைக் கிரகிக்கிறது. இதுவே நுரையீரலில் நீர்த்தேக்கக் காரணமாகிறது. நுரையீரலில் தேக்கம் கொள்ளும் இந்த நீர்தேக்கச் சக்தியானது, சுவாசத்தின் மூலமாக வெளியேற்றப் படவேண்டும்: அதிகப்படியான நீர்ச்சக்தி, நீராவியாக மூக்கின் வழியாகஅதிகமாகவெளியேறும் போது தான் மூக்கில் முணு முணுப்பு ஏற்பட்டு முதல் தும்மல்வெளியாகிறது: முதல் தும்மல் தொடங்கின 24 மணி நேரத்திற்குள் இந்த நீர்ச் சக்தி தொண்டையில் தேங்கி, சளி, இருமல் என்று தொடங்கிகடைசியாக நுரையீரல் முழுமையிலும்சளிகட்ட ஆரம்பிக்கிறது.

தாய்மார்களே! உங்கள் குழந்தைகளுக்கு முதன் முதலாக ஏற்படும் முதல்உபாதை தும்மல், ஜலதோஷம் தான்! பின்னரே ஜுரம், இருமல் என்று ஏற்படுகிறது. இதற்குக் காரணம் நீங்கள் கொடுக்கும் பாலில் தண்ணீர் சத்து அதிகமாக இருக்கிறது. உணவுச்சத்தும் அடங்கியிருக்கிறது: குழந்தைகளுக்குத் தண்ணீர் தாகம் எடுக்கும் போது அழுகின்றன. பிறந்த குழந்தைகளுக்குப் பாலூட்டும் தாய்மார்கள் உடனே ஊட்டுவார்கள்: பாலில் நீர்ச்சத்து இருப்பதால், குழந்தை பாலைக் குடித்து, தண்ணீர் தாகத்தை அடக்கிக் கொள்கிறது. ஆனால் நீங்கள கொடுக்கும் பாலில் தண்ணீர்ச் சத்தும், உணவும் அடங்கியிருக்கிறது என்பதை உணரத் தவறிவிடுகிறீர்கள். பசிக்குத் தான் உணவு, தாகத்திற்கு அல்ல, இவ்வாறாகத் தாகம் எடுக்கும் போது உணவையும், பசி எடுக்கும் போது பாலையும் கொடுப்பதன் மூலம், பாலுடன் கலந்துள்ள நீர் சக்தியைக் கொடுக்கும் போதுமேலே சொன்ன முறையில் தும்மல், சளி, ஜலதோஷம் ஆரம்பமாகிறது.

தாய்மார்களே! பாலருந்தும் குழந்தைகளுக்கு உணவளிப்பதிலும் (பால் கொடுப்பதிலும்) தாகத்தின் போது தண்ணீரை மட்டுமே கொடுக்க வேண்டும் என்பதிலும், கவனமாக இருங்கள். இதைக் கண்டு பிடிக்கும் முறை மிகச் சுலபமாகும். குழந்தை எப்பொழுது அழுதாலும், முதலில் தண்ணீரைக் குடிக்கக் கொடுங்கள். குழந்தை பசிக்காக அழுதிருக்குமானால் தண்ணீர் வாயில் பட்டதும், அதைத் தட்டி விட்டு மீண்டும் அழ ஆரம்பிக்கும், இப்போது பாலைக் கொடுங்கள், திருப்தியாகக் குடித்து விட்டுத் தூங்கும் குழந்தைக்கு தாகம் மட்டுமே இருப்பின் தண்ணீரைத் திருப்தியாகக் குடித்து விட்டு தூங்கும்.

தாய்மார்களே! உங்கள் குழந்தைகளுக்கு,

1) பசி எடுத்து விட்டால் தாமதிக்காமல் உடனடியாக உணவைக் கொடுங்கள்.
2) அதிக குளிர்ச்சியாகவோ அல்லது அதிக சூடாகவோ உணவை உண்ணச் செய்யாதீர்கள்;
3) உணவைச் சிறுகச் சிறுக எடுத்து வாயில் வைத்து முடிந்த மட்டும் நன்றாக மென்று விழுங்கச் சொல்லுங்கள்.
4) உணவு உண்ணும் போது இடையிடையே தண்ணீர் அருந்துவதை அனுமதிக்காதீர்கள்.
5) உண்மையிலேயே தாகம் அதிகமாக இருப்பின், உணவருந்தலை உடனே நிறுத்த வேண்டும்.
6) குறைந்தது 10 நிமிடங்களாவது வயிற்றின் சுரப்பு நீர்களுடன்உட்கொண்ட உணவு முழுமையாகக் கலக்கும் வரை குடிக்கத் தண்ணீர் கொடுக்க வேண்டாம்;
7) பத்து நிமிடங்கள்கழித்து சாதாரண தண்ணீரையே பருகக் கொடுங்கள்;
8) குளிர்ச்சியானநீரையோ, பதார்த்தங்களையோ முடிந்தவரை தவிர்க்க வேண்டும் என்ற அறிவை ஊட்டி வளருங்கள்.
9) இவற்றையும் மீறி. ஜலதோஷம் பிடிக்குமானால் பால், டீ காப்பி, போன்றவற்றை ஜலதோஷம் ஆரம்பித்த 24 மணி நேரங்களுக்குச் சுத்தமாக நிறுத்திவிடவும்;
10) வெதுப்பான அல்லது சூடான நீரைத் தவிர தாகத்திற்குவேறெதனையும் பருக வேண்டாம்
11) உணவிற்குப் 10 நிமிடங்கள் முன்பு பின்பு தண்ணீர் அருந்தவேண்டாம்
12) உணவு உண்பதற்கு சற்று முன்போ அல்லது உணவருந்தும்போது, பின்போ அல்லது அத்தியாவசியமாக தண்ணீர் அருந்த வேண்டும். என்ற நிலை ஏற்பட்டால், வெதுவெதுப்பான நீரை அருந்துங்கள்
13) உண்ணும் போது நடுவே தாகம ஏற்பட்டால் உண்ணுவதை நிறுத்தி விடுங்கள். பத்து நிமிடங்கள் கழித்துஉங்கள் தாகத்தை தணித்துக் கொள்ளுங்கள். □

## தினசரி தியானம்

### திரை

எம்மை வினையை
இறையை எம்பாற் காட்டாத
அம்மை திரோதை
அகலு நாள் எந்நாளோ?

-தாயுமானவர்-

தேவே, உன்னை நான் தரிசித்தற் பொருட்டு திரையை நீக்கி வைப்பாயாக,

உள்ளிருக்கும் தெய்வத்தைக் காண வொட்டாது மறைந்திருப்பது அஞ்ஞானம் என்னும் திரை, ஆசா பாசங்கள், அபிப்பிராயங்கள், வெறுப்பு, வெகுளி- இப்படியெல்லாம் வடிவெடுத்தாய் இருக்கிறது. அத்திரை இச் குறைபாடுகளையெல்லாம் களையுங்கால் திரையும் நீங்கப் பெறுகிறது!

-ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர்-

# நல்லூர் பிரதேசத்தில் 11 வீடமைப்புத் திட்டம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட 43 சனசமூக நிலையங்களுக்கு வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நிதி ஒதுக்கீடு செய்துள்ளதாக நல்லூர் பிரதேசசபைத்தலைவர் க: மணிபல்லவராஜன் தெரிவித்தார்.

நல்லூர் பிரதே சத்தில்விரைவில் 11 வீடமைப்புத்திட்டம் முன்னெடுக்கப்பட இருப்பதாகவும் நல்லூர் பிரதேச சபை நகரசபையாக மாற்றம் பெறும் என்றும் அவர்மேலும் தெரிவித்தார். (உ-106)

# இலவசமாக கிணறு இறைப்பு

(துன்னாலை)

சாவகச்சேரி நகரசபைக்கு உட்பட்ட பகுதியில் அமைந்துள்ள தனியார் மற்றும் பொதுப்பாவனைக் கிணறுகள் சம்பந்தப்பட்ட நகரசபையினால் இலவசமாக இறைத்துக் கொடுக்கப்பட்டு வருகின்றது. (உ-41)

# ஆப்கான் வான்பரப்பில் விமானம் பறக்கத் தடை

## தலிபான்கள் அறிவிப்பு

(காபூல்)

ஆப்கானிஸ்தான் வான் பரப்பு நேற்று முதல் வான் போக்குவரத்துக்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாக தலிபான் ஆட்சியாளர்கள் அறிவித்துள்ளனர்.

மேற்படி அறிவிப்பை மீறி ஆப்கானிஸ்தானுக்குள் நுழையும் எந்தவொரு விமானத்தையும் சுட்டு வீழ்த்துமாறு தலிபான்கள் விமானப்படையினருக்கு அறிவுறுத்தியுள்ளனர்.

எந்த நாட்டின் போர் விமானமோ, பயணிகள் விமானமோமற்றும் உலங்குவானூர்திகளோ ஆப்கான் வான் பரப்பினுள் நுழையக் கூடாது. மீறி நுழைந்தால் விமானங்கள் சுட்டு வீழ்த்தப் படுமெனவும் தலிபான்கள் எச்சரித்துள்ளனர்.

அமெரிக்க போர் விமானங்கள் எந்த வேளையிலும் ஆப்கானுக்குள் புகுந்து தாக்குதல் நடத்தலாமென அச்சம் கொண்டிருக்கும் இந்நிலையில், தலிபான்களின் வான் பரப்பு மூடப்பட்டதான அறிவித்தல் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பின்லேடனை தன்னிடம் ஒப்படைக்க ஆப்கானிஸ்தானுக்கு காலக்கெடுவிதித்துள்ள அமெரிக்கா அது நிறைவேறாது விட்டால் ஆப்கான் மீது தாக்குதல் நடத்தும்.

இந்நிலையில் அமெரிக்கப் போர் விமானங்கள் ஆப்கானில் சுட்டு வீழ்த்தப்பட்டால் போரின் உக்கிரம் உச்சத்தையடைந்து அழிவுகள் அதிகரிக்கலாமென அச்சம் ஏற்பட்டுள்ளது.

இதேவேளை ஆப்கானுக்குள் அகப்பட்டுள்ள ஐ. நா பணியாளர்கள் மற்றும் சர்வதேச தொண்டர் அமைப்புப் பிரதிநிதிகளை அங்கிருந்து வெளியேற்றுவதில் பெரும் சிக்கல் எழுந்துள்ளது.

விமானங்கள் பறக்க முடியாததனால் இவர்கள் தரை வழிப்பாதையூடாக பாகிஸ்தான் அல்லது ஈரான்சென்றடைந்தேபயணத்தைதொடர வேண்டிய அவல நிலை ஏற்பட்டுள்ளது. (இ)

யாழ். மேல்

கோன் தலைமையில் நேற்று கூடியது. இக்கூட்டத்தில் இரா.சம்பந்தன், தர்மலிங்கம் சித்தார்த்தன், லஷ்மன் ஜெயக்கொடி ஆகியோர் கலந்து கொண்டனர்.

தொல்லை தவிர்ப்பு குழுவுக்கு மனுசெய்திருந்த திவ்வியனுக்கும் இது தொடர்பாக அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் சட்டத்தரணி பொன்னம்பலம் தெரிவித்துள்ளார். (வ)

அமைச்சர

இதேவேளை இன்றுஅமைச்சராக பதவியேற்க வருமாறு ஜனாதிபதி செயலகம்தொண்டமானுக்கு அறிவித்த தாகவும்அவர் அதனைநாளைபுதன் கிழமை ஏற்பதாக அறிவித்துள்ளதாகவும் அமைச்சரவை வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இது இவ்வாறிருக்க நகர அபிவிருத்தி பொது வசதிகள் வீடமைப்பு விளையாட்டுத் துறை அமைச்சராக நியமிக்கப்பட்ட மங்கள சமரவீர அப் பதவியில் இருந்து ஜனாதிபதியால் நீக்கப்பட்டுள்ளார்.

இந்நடவடிக்கை ஜே வி.பியின் புரிந்துணர்வு ஒப்பந்த நெருக்கடியை தணிக்கவே மேற்கொள்ளப் பட்டுள்ளது. (இ)

# தலிபான் ஆட்சியாளர்கள் இன்று கூடி ஆராய்வு

அமெரிக்கா மீதான தாக்குதலுக்குஒஸாமாபின்லேடனே காரணமென அமெரிக்கா கூறி வரும் இவ்வேளையில் பின்லேடனைத்தொடர்ந்தும் ஆப்கானில் அனுமதிப்பதா இல்லையா என்பதைத் தீர்மானிக்க இஸ்லாமிய மதத்தலைவர்களுடனான அவசர கூட்டமொன்றை தலிபான் ஆட்சியாளர்கள் இன்று கூட்டவுள்ளனர்.

பாகிஸ்தானிலிருந்து ஆப்கானிஸ்தானிற்குச்சென்ற தூதுக்குழுவினர் தலிபான் ஆட்சியாளர்முல்லா மொகமட் ஒமருடன் நடத்திய பேச்சுவார்த்தையின் போது ஒஸாமா பின்லேடனை மூன்றாம் நாடு ஒன்றிடம் ஒப்படைக்கத் தவறும் பட்சத்தில் அமெரிக்காவின் தாக்குதலை எதிர்கொள்வது தவிர்க்க முடியாதென்று தெரிவித்திருந்தனர். இதனை அடுத்தே மேற்படி அவசரகூட்டத்திற்கு தலிபான் ஆட்சியாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.

பாராளு

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசைப் பொறுத்த வரையில் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேசுவதற்கும் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கும் தயாராக உள்ள அதேவேளை விடுதலைப் புலிகள் மீதான தடையை மட்டும் நீக்குவது தொடர்பாக இன்னமும் அரசு ஒரு முடிவுக்கும் வரவில்லை.

ஜே. வி. பியின் 20 கோரிக்கைகளுக்கு இணங்கிய அரசு இது விடயத்தில் இன்று வரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இதன் காரணமாக 24ம் திகதி பாராளுமன்றில் 17வது அரசியல் அமைப்புச் சட்டம் சமர்ப்பிக்கப்படும்போது தமிழர் விடுதலைக் கூட்டணி அது தொடர்பாக அறிக்கை ஒன்றினை விடுத்து பாராளுமன்றத்தை பகிஷ்கரிக்க சர்வதேச சமூகத்திற்கு தமது நிலைப்பாட்டை எடுத்துக் காட்டவுள்ளதாக கூட்டணி வட்டாரங்கள் தெரிவித்தன

பாராளுமன்றத்தைப் பகிஷ்கரித்தாலும், ஆணைக் குழுக்கள் அமைப்பதற்குத் தாம் எதிர்ப்பல்ல என்றும் கூட்டணியினர் தெரிவித்துள்ளனர். (வ)

தமிழ்க்கட்சிகளின்

நிலையை உருவானால், விடுதலைப்புலிகளின் தடையை நீக்கி அவர்களுடன் பேசவும், இதன்மூலம் அவர்களின் ஆதரவையும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் (ரவூப்ஹக்கீம் அணி) ஆதரவையும்பெறமுடியும் என்று சிரேஷ்ட அமைச்சர்கள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

இதுஇவ்வாறுஇருக்க தமிழ் கட்சிகள் ஆதரவைப் பெறுவதற்கான ஆரம்பநடவடிக்கையாக அமைச்சர் பட்டி வீரக்கோன் இன்றிரவுதமிழர் விடுதலைக் கூட்டணியைச் சந்தித்துப் பேசவுள்ளதாக நேற்றிரவு கிடைத்த செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

இதன்மூலம் இலங்கை அரசியலில் திடீர் மாற்றம் எந்நேரமும்ஏற்படலாம் என்றும் கொழும்பு அரசியல்வட்டாரங்களில் பரவலாகப் பேசப் படுகிறது. (வ)

பின்லேடனை

அவர்களது நலன்களைப் பேணி எடுக்கவேண்டிய அவசர நடவடிக்கைகள் குறித்து பாகிஸ்தான் ஆராய்ந்துவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை அமெரிக்க என்மீது குற்றம் சாட்டுகிறது ஆனாலும் நான் இதனைத் திட்டவட்டமாக மறுக்கின்றேன் இதனைச் செய்தவர்கள் தமதுசொந்த நலனுக்காகவே செய்துள்ளனர் என்று ஆப்கானின் ஏ பீ ஐ செய்தி நிறுவனத்திற்கு வழங்கிய பேட்டியில் பின்லேடன் தெரிவித்துள்ளார். (ந-5)

பருத்தித்துறை

மாவட்டம்)

● லெப். கிருபாணன் /நளன் (றொவேல்ட் தேவானந்தன், மன்னார் மாவட்டம்)

ஆகிய கடற்புலிகளும்,

● லெப். கேணல் அருட்செல்வன் (சிதம்பரப்பிள்ளை சிவகுமார், நெடுங்கேணி)

● மேஜர் காண்டி (சேதுகுபெரின், மன்னார் மாவட்டம்)

● மேஜர் அருணா/சுதா (குணசிங்கம் தவச்செல்வி, யாழ் மாவட்டம்)

● மேஜர் நித்தியா (செல்வராசா தயாளினி, யாழ்மாவட்டம்)

ஆகிய கடற்கரும்புலிகளும் தமது தரப்பில் உயிரிழந்ததாக விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர். (ந-4)

அரசு. ஜே.வி.பி

கொண்டுவரவுள்ள 17 வது திருத்தச்சட்டம்தொடர்பான இறுதிக்கட்டப் பேச்சுவார்த்தை இது வென்றும் இதில் இணக்கம் காணப்படாத விடயங்களில் இறுதி முடிவுகள் எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார். [ந-4]


YOGI HOME SCIENCE ACADEMY

★ 21-09-2001 வெள்ளிக்கிழமை முதல் அனைத்து மனையியல் வகுப்புக்களும் ஆரம்பமாக உள்ளன சேர விரும்புவோர் உடன் தொடர்புகொள்ளவும்.

★ யாழ் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெறும் மாணவிகள் தம்மை அழகாக Hair Style Dressing செய்து கொள்வதற்கு முன் கூட்டியே எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

YOGI BEAUTY PARLOUR
75, அம்மன் வீதி
நல்லூர்
(3558) யாழ்ப்பாணம்

யாழ். மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் - வரையுள்ளது

கோதுமை மாவு விநியோகம்

பிறிமா சிலோன் லிமிட்டட் நிறுவனத்தின் யாழ்ப்பாண மாவட்ட விநியோகத்தர் இருவரில் ஒரு நிறுவனமான இச்சமாசம் பிறிமா பொருட்களின் விலைகளை பின்வருமாறு நிர்ணயித்துள்ளது.

★ வீட்டுப் பாவனைக்கான பிறிமா பிரான் மாவு- சமாச விலை கிலோ ரூபா 19/15; சங்கங்களின் மொத்தவிலை கிலோ ரூபா 19/50; சங்கங்களின் சில்லறை விலை கிலோ ரூபா 19/75

★ பேக்கரிகளுக்கான மில்பிரான்ட் மாவு- சமாச விலை கிலோ ரூபா 19/65; சங்கங்களின்விலை கிலோ ரூபா 20/-

★ றவை- சமாச விலை கிலோ ரூபா 27/-; சங்கங்களின்விலை கிலோ ரூபா 30/-

111, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

- தலைவர்
(கி-2512)

உடன் தேவை

புளொக் தயாரிப்பாளர் உடன் தேவை

நேரில் தொடர்பு கொள்க

வலம்புரி
இல. 15, வெள்ளாந் தெரு
யாழ்ப்பாணம்



காலத்தால் அழியாத கற்பனைக்கு எட்டாத தங்க வைர நகைகளுக்கு

நிருத்திகா ஜுவலர்ஸ்

177, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P 021 - 2694

(கி 2367)


இப் பத்திரிகை "வலம்புரி" அன் கோ ஸ்தாபனத்தாரால் இல: 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001-ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 18-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.